52

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

30 JUL 193

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 ஹு ஜுலை மீ 2உ [No. 26

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 501
2. அப்பர் (64-கலை-யோகம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 503
3. சூளாமணி - (மந்திரசாலைச் சருக்கம்-17—27)
K. இராமரத்நம் ஐயர் B.A. 505
4. நவராத்திரி — ஓர் நாடகம்
K. N. சுந்தரேசன் B. A. (Hons) 508
5. நெற்குன்றவாணர்.
M. P. குமாரநாயகம். 510
6. மானதசாத்திரம் (இடவுணர்வு)
T. P. மீனாக்ஷிசுந்தரம் M.A. B.L. 512
7. யாப்பிலக்கணம் (அசை, சீர், தளை, அடி தொடை) 514
8. கம்பராமாயணம் (நகர்நீங்கு படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 515
9. வர்த்தமானம் 519

கலாநிலயம்

188924

பூனைப் பூசல்.

மணவினை நிகழ்கின்ற மனையொன்று. வருவோரும் போவோரும் விரவிச்சுழன்ற அவ்வீட்டின்கண் வேலைமிகுதியால் நின்றவிடம் நிற்காமல் அலைந்தவர் சிலரும், வேலையொன்றுமின்றியே அதிகம் இருந்தது போல் நினைத்து அலைந்தவர் பலருமாய், எதிர்ப்பட்டோரிடத்தெல்லாம் உரத்தும் உள்ளடங்கியும் காரியம்போல் பலப்பல பேசிப் பகற்பொழுது கழிந்தது. இரவு வருதலும் யாவரும் பெருவிருந் தருந்திச் சிறிதுநேரம் அசதிபாடியபின், கண்ட கண்ட இடங்களிற் கிடந்துறங்குங் குழந்தைகளை இடறிச்சென்று, எண்சாண்நிலம் எஞ்சியுளது எங்கெங்கென்று தேடி அங்கங்குத் தாமும் சோர்துயிலில் மூழ்கினர். மெய்ம்மறந்த நித்திரை. இரவு மணி இரண்டாயிற்று. எண்ணெய் வறண்டு விடிவிளக்கும் அவிந்தது. அச்சமயம் புதுமனம் புக்கிருந்த பூனைகள் இரண்டு ஒன்றையொன்று தொடர்ந்து அம்மனை முற்றத்தின் நடுவில் தோன்றின. காமத்தின் பதம்பார்க்கக் கற்றிலாவக் கடுவன் தன் காதலியின் ஊடலை இளகாமுன் உணர்த்த முயன்றதால், அமர்ந்து தொடங்கிய நெடுங்குரல் வர வர எதிரெதிர் அதிகமாகிப் பெருகப் பேராரவாரமாயிற்று, அப்பூனையின் பூசல். இவ்வரவம், அங்குப் படுத்திருந்தோரில் ஒருவனது தூக்கத்துள் துளைத்தது. செவிதிறந்ததெனினும் அவன் சிந்தனை தெளியவில்லையாதலின், உலகங் கவிழ்ந்ததோ ஊழிபெயர்ந்ததோ எனக் கலங்கினனாய்க் கதுமென உற்றெழுந்து, "ஐயோ வையோ" வெனக் கதறவாரம்பித்தான். அவனயல் கிடந்த வேறொருவன் இதனால் விழிப்புண்டெழுந்து, "திருடன் திருடன்" எனக் கத்தி அவனைப் போய் இறுகப் பற்றிக்கொண்டனன். அவனோ திருடன்தான் தன்னைப் பற்றிக் கொண்டான் என்று நனி வெருவினனாய்த் தானுந் "திருடன் திருடன்" எனப் பெருமுழக் கெழுப்பலாயினன். இவ்வொலியால் துயிலுடைந்த மூன்றா மொருவன், "ஐயையோ திருடர், திருடர்" என இருவர் கழுத்தையும் தன் கைகளால் இடிக்கினன். இம்மூவர் முழக்கத்தாலும் விழியாதவர் இனி இல்லை. எல்லோரும் எழுந்தனர். விளைந்த தொன்றுந் தெரியாமல் தாம் தாம் இருந்த இடத்தில் "ஐயையோ, ஐயையோ" வென அரற்றலாயினர். முதியோரும் இளைஞரும் ஆண்பாலாரும் பெண்பாலாரும் விட்டிசைத்த இப்பேரோசை அண்டையயல் வீட்டோரையெல்லாம் விரைவுடன் இங்கு வரச் செய்தது. விடுவிடு, எடுஎடு, பிடிபிடி, என்றென்றனைவரும், ஒன்றுந் தெரியாதிருந்தும், ஓலமிடுவார்தம்முடன் சேர்ந்து தாமும் ஓலமிட்டனர். இதன்மேல் இனி இங்கு இயம்பவேண்டுவதில்லை. விடயந் தெரிந்தபின்னர் விட்டெழுந்த விடாநகையால் பிளந்தது அவ்வீட்டின் கூரை. பூனைகளிரண்டும் ஓர் மூலையிற் பதுங்கித் தம்மால் விளைந்த தன்மையைத் தாமே தெரியக் கண்டிருந்தன. இது பொய்க்கதையன்று—இரண்டு மூன்று நாட்களுக்குமுன் யாம் காண நிகழ்ந்ததோர் நிகழ்ச்சியேயாம்.

உலகத்தை அலைத்துவைக்கும் கலகங்களெல்லாம் பெரும்பாலும் இத்தகைத்தே. பூனைப் பூசலினும் பெரியதோர் காரணமும் அவைகளுக்கு இருப்பதில்லை. மயக்கறு காட்சியும் மானதத் தெளிவுமில்லா

மாக்கள் எண்ணிறந்தோர் இன்றெங்கும் விழிதுயில் வாழ்க்கையே நடத்திவருகின்றனர். இரவில் அவர் பாயுந் தலையணையுமாய்ப் படுத்துறங்குவ தெல்லாம் தூக்கத்துட் தூக்கம் என்னப்படும். இவ்விழிதுயில் வாழ்க்கையில் அவர்தமை வெருவுறச் செய்வன பலப்பல. ஆர அமர்ந்து வாழுமொரு அமைதியை அருட்பெருங் கடவுள் நமக்கு அளித்திருக்க, 'நன்றுந்தீதும் பிறர்தர வரும்' என்னும் மருட்கையால் பேதுற்று அவ்வமைதியைக் கைகடக்க விட்டுவிட்டு வீணே அலைந்து திரிகின்றோம். விழைந்த நன்மையைத் தனக்குப் பிறர் செய்யா தொழிவரோ வென்றும், விழையாத் தீமையை இழைத்திடுவாரோ என்றும், உள்ளங்குலைந் துழல்கின்றது. இதனால் இருதிறத்தும் அச்சமே. வேண்டாவழிச்சாரிகைகள் வழங்கப்பெறும் செய்யுள்களேபோல், வேண்டாவழி அச்சங்களால் மாறுடவாழ்க்கையெனும் பாசுரம் தனக்குரிய இசமொளி தீர்ந்து மழுங்காது என் செய்யும்! இதனால், மணவிழாவயர்ந்த அவ் வீட்டில் பூனையொலி கேட்டுப் புக்கெழுந்த அலறல் போல் எங்கெங்கு மிந்நாள் இரங்கியும் இகலியும் கதறுவார் கம்பலை கறங்கக் கேட்கின்றோம் என்னிதென்று இருந்தாழ்ந்து ஆராய்வோமாயின் அத்துணை அவலமும் அத்துணை இகலும், இத்துணைக்கு மாதாரமாயிருந்த அச்சமும் யாவும் அடிப்படை ஆதாரமின்றித் தூக்கக் கலக்கத்திலே துவங்கிய துழனியாய் முடிந்துவிடும். இது தெரிந்தால் பின் யாதும் அல்லலில்லை, அவலமில்லை, ஆரவாரப் பெருக்குமில்லை. உலகமெல்லாம் இசை சிதையாது ஒழுகும். ஆலிவர் கோல்ட்ஸ்மித் (Oliver Goldsmith) என்னும் புலவர் மகிழ்ந்து பாராட்டுகின்ற அவ் வாழ்க்கையின் சமப்போக்கு (Even tenor of life) எல்லார்க்கும் எளிதில் வந்தெய்திபதாகும். இதுவன்றி, வீணே பயங்கொண்டு, அதுதீர்க்க முயன்றவர்தம் அவலச் செய்தியையும், அன்னவர்க்குவந்த பின்புத்தியையும் ஷேக்ஸ்பியர் ஓரிடத்தில் அருமையாய்க் காட்டியிருப்பதை இங்குக் கருத்துட்கொள்வது ஏற்புடைத்தென்று நினைக்கின்றோம்.

உண்ணாட்டுப் பூசலாலும் பிறநாட்டுப்போராலும் அலைப்புண்ட ரோமாபுரி சனத்தலைவர்கள் ஜூலியஸ் ஸீஸர் என்னும் வீரனைச் சர்வாதிகாரியாக்க அவன் யாவரையும் வென்றடக்கி வெற்றியுடை ஆற்றலோடு விளங்குநாள், அழுக்காறுற்ற அவனது உழையவர் சிலர், இத்துணை யாற்றலுடைய இந்த ஸீஸர் இருக்கும்வரையில் தந்தலை நிமிரும்வகை யில்லையென்றும் குடிகளின் உரிமை குலைந்தழியு மென்றும், கொடுங்கோல் மன்னனாய் இவன் மாறிவிடுவா னென்றும் அஞ்சி, வஞ்சனைக் கரவுடைய தம் கத்தியால் அவனை ஆத்தானமண்டபத்தில் குத்திச் சாய்த்துவிட்டனர். இதுகாண, அவைக்களமமர்ந்தோரும் அந்நகர வாசிகளும் அலமந்து கலக்கமெய்த அன்னவரைத் தேற்றுவதற்கு ஏற்றபடி இதுவென்ன இச் சதிக் கொலைகாரர் பின்வருமாறு தம்முள் பேசிக்கொள்கின்றனர்:—

Brutus:— Stoop, Romans, Stoop
And let us bathe our hands in Ceasar's blood
Up to the elbows, and besmear our swords,
Then walk we forth, even to the market place;
And, waving our red weapons o'er our heads,
Let's all cry, "Peace, freedom, and liberty"

Cassius:—Stoop then, and wash—how many ages hence
Shall this our lofty scene be acted over,
In states unborn, and accents yet unknown.

Brutus:—How many times shall Ceasar bleed in sport,
That now on Pompey's basis lies along,
No worthier than the dust!

Cassius:— So oft as that shall be
So often shall the knot of us be call'd
The men that gave their country liberty.

ப்ரூடஸ்:—குனிமின், உரோமர்காள், குனிமின். குனிந்து, முழங்கைவரையிலும் நமது கைகளை நாம் ஸீஸரின் இரத்தத்தில் தோய்ப்போம்; நம் வாட்களுக்கும் பூசுவோம். பின்னர் ஆவணத்தருகிருக்கும் பொதுமன்றம் ஏகி, செந்நீராடிய நம் சாயகங்களைத் தலையின்மேல் விதிர்த்தனராய், நாமெல்லோரும், "அமைதி, சுதந்தரம், விடுதலை" என்றென்று கூவுவோம்.

காஸியஸ்:—எனின், குனிந்து மெழுகுமின் - இதுகாறும் பிறந்திரா அரசினில், தெரிந்திராப் பாஷையில், உயரிய நமதிந்தக் காட்சிக்களம் எத்தனை காலங்களுக்கப்பால் மீண்டும் நடிக்கப்பெறுமோ!

ப்ரூடஸ்:—புழுதியிலும் அதிகமோர் பெருமையின்றி, பாம்பேயின் பீடமிசை இன்று நெடிதேகிடக்கும் ஸீஸர்தான் இனி வீண்விளையாட்டாய் எத்துணைமுறை குருதி சிந்த நேருமோ!

காஸியஸ்:—எத்துணை முறை அது நிகழினும், அத்துணை முறையும் நம்மின் கூட்டத்தோர், தம் நாட்டிற்கு விடுதலை அளித்தவரென் றழைக்கப்படுவார் சரதம்.

பாம்பே என்பவன் ஸீஸருக்குமுன் வீரர்தலைவனாயிருந்து உரோமாபுரியினரால் கொண்டாடப்பெற்றவன். அவனையும் வென்று கொன்று அதிகாரமெய்திய ஸீஸர் இன்று, விதி என்றும் வழிவிலகா தாதலின், அந்தப் பாம்பேயின் உருவச்சிலை நாட்டியிருந்த பீடத்தின்மீது அவன்றன் காலின் கீழேயே மாண்டு கிடக்கின்றான். இந்த ஸீஸரைக் கொன்றவர் கதியும் பின்னர் இன்னதே ஆகிற்கின்றது. அதுகிடக்க, சதி செய்த ப்ரூடஸிற்கும் காஸியஸிற்கும், ஸீஸரை வதைத்ததெல்லாம் வறிதே என்ற மதி பின்னேனும் தோன்றிய நுட்பமொன்றிங்கு யாவராலும் மதித்துணர்தற் குரியது. தனக்குமுன் பாம்பேயைக் கொன்றழித்த ஸீஸர் இன்று புழுதியாய்ப் போனவாங்கே, அந்த ஸீஸரைக் கொன்ற தாமும் போகவேண்டுமென்னும் நினைவு ஒருபுறமும், நோக்கங்கள் வேறாயினும், இவ்வணமே உலகத்தில் எந்நாளும் ஒருவனைக் கொன்று தீர்த்து, அக் கொலையினால் வருமெனக் கருதிய பயனைத் தாமொன்றுந் துய்க்காமலும், மற்றவர்க்கு அக்கொலையின் வழியாய் நீக்கிவைக்க வேண்டுமென்று அச்சுறுத்தியதெல்லாம் பொய்யேயாய் முடிவது மறுபுறமும், நிகழ்கின்ற இதுபோன்ற செய்கையாளர்தம்மை உலகத்தோர், நாட்டின் சுதந்தரத்தை அளித்தவர் என்றழைப்பார் என்னும் வீண்மொழியே ஊதியமல்லால் உற்ற பயன் யாதுமில்லை என்ற துணிவை ஷேக்ஸ்பியருடன் ஏற்றுக்கொண்டால், பூனைப்பூசலே புகுந்துழக்குகின்றது இவ்வுலகை என்னுமவ் வுண்மையை உணர்வது அரியதாகுமோ!

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

24. யோகம்

[484-வது பக்கத் தொடர்ச்சி]

யோகத்தில் யோகம்

இனி ஹடயோகத்தின் யோகம் யாதெனச் சிறிதிங்கு ஆராய்வோம்:—முன்னரே யோகமென்பது பீடு அல்லது பெருஞ்சிறப்பென்னும் பொருளுளதென்று கண்டோம். உலகவழக்கில் "என்ன யோகம் இது!" "என்ன திசை யிது" என்று கூறுவது * இங்கிலைக்கே சிறப்பாய்ப் பொருந்தும். ஹடயோகக் கிரியைகள் முற்றிய பயன் சித்தி யென்னப்படும்; அது எட்டுவகைப்படும். அஷ்டமாசித்தி யென்னும் இப்பகுதிகளை அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பர். இவற்றின் இலக்கணத்தைப் பரஞ்சோதிமுனிவர் விளக்குவார்.

அறவுஞ் சிறிய வுயிர்தொறுந்தான்
பரம காட்டை யணுவாய்ச்சென்
றுறையுஞ் சிறுமை யணிமாவாம்
உவரி ஞால முதன்மேலென்
றுறையஞ் சிவானந்த மாளுறு
முள்ளும் புறமு மகலாதே
நிறையும் பெருமை தனையன்றே
மகிமா வென்னு நிரம்பியநூல்.

இலகு மேரு பாரம் போல்
இருக்கும் யோகி தனையெடுத்தால்
இலகுவான தூலமென
இருப்ப திலகி மாவாகும்
இலகு வான பாவனுப்போல்
இருக்கும் யோகி தனை யெடுத்தால்
இலகு மேரு பாரமென
விருப்ப தன்றே கரிமாவாம்.

அஷ்டமாசித்தி வுபதேசித்த படலம். 23. 24

பிலத்தி லிருந்தோ னயனுலகிற்
புகுதன் மீண்டும் பிலமடைதல்
பலத்தின் மிகுந்த பிராத்திபதாம்
பரகா யத்தில் நண்ணுதல் வான்
புலத்தி னியங்கல் இச்சித்த
போக மனைத்துள் தானிருக்குந்
தவத்தி னினைந்த படி வருதல்
பிராகா மியமாந் தவக் கொடியீர்!

விண்ணணி விரவி தன்னுடம்பின்
வெயிலா வனைத்தும் விளங்குதல் போன்
மண்ணி னுளவாம் பொருள் பலவும்
கால மூன்றும் வானத்தின்
கண்ணி னுளவாம் பொருளுந்தன்
காயத் தொளியா லிருந்தறிதல்
எண்ணி லிதுவ மறையொரு சார்
பிராகா மியமென் றியம்புமால்.

ஈச னெனமுத் தொழிலுந்தன்
னிச்சை வழிசெய் தெழுபுரவித்
தேசன் முதற்கோள் பணிகேட்பத்
திகழ்வ தீசத் துவமாகும்
பூச லவுணர் புள்விலங்கு
பூத மனிதர் முதலுலகும்
வாச வாதி யெண்மருந்தன்
வசமாக் கொள்கை வசித்துவமாம்.

அஷ்டமாசித்தி யுபதேசித்தபடலம் 25, 26, 27.

மேலே காட்டிய அட்டமா சித்திகளுடன் பல சித்திகளும் உள. விருத்தரைப் பால குமாரராக்குவதும் பாலரை விருத்தராக்குவதும், மலையைக் கடுகில் அடக்கிக்காட்டுவதும் ஓரிடத்தில் இறந்து மற்றோரிடத்தில் எழுந்து உலாவுவதும் சித்தர்கள் செய்கைகளாம். ஆணைப் பெண்ணாக்கல், பெண்ணை ஆணாக்கல் முதலியனவும் இதன்பாற்படும். *திருஞானசம்பந்தர் ஆண்பனையைப் பெண்பனையாக மாற்றியதையும் ஒருவகைச் சித்து என்னில், இத்தன்மை வேண்டாதே சிவஞானிகளுக்கு வருமென்பர் மேலோர்.

யோகத்தில் ஆழ்ந்து அஷ்டமாசித்துகளை இச்சித்தோர் அதில் மேன்மேலும் பழகி, என்றும் அழியாக் காயத்துடன் உலாவிவருவர். ஆயினும் தாயுமானவர் கூறியதுபோல்

கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாங்
கரடிவெம் புலிவா யையுங்
கட்டலா மொருசிங்க முதுகின்மேற் கொள்ளலாங்
கட்செவி யெடுத் தாட்டலாம்
வெந்தழலின் இரதம்வைத் தைந்துலோ கத்தையும்
வேதித்து விற்றுண் ணலாம்
வேறொருவர் காணாம லுலகத்து லாவலாம்
விண்ணவரை யேவல் கொளலாஞ்
சந்ததமு மிளமையோ டிருக்கலாம் மற்றொரு
சரீரத்தி னும்புகு தலாஞ்
சலமேல் நடக்கலாம் கனல்மே லிருக்கலாம்
தன்னிகரில் சித்தி பெறலாம்
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
திறமரிது சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோன் ம யானந்தமே.

தேசோன்மயானந்தம் 8.

* எம்மை புணர்ந்த யோகியர்க
ளிவற்றை விரும்பா ரெனினுமவர்
தம்மை நிழல்போ லடைந்துலகாக்
கனையார் பெருமைதனை புணர்த்துஞ்
செம்மை புடைய விவையென்னச்
சித்தி யெட்டேர் தெளிவெய்தக்
கொம்மை முலையா ரறவருக்குங்
கொளுத்தி னனெண் குணச்செல்வன்.

திருவிளையாடற் புராணம்.

* குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்
அரும்பு கொன்றை யடிகளைப்
பெரும் புகலியில் ஞானசம்பந்தன் சொல்
விரும்புவார் வினை வீடே.

சம்பந்தர்.

இத்தகைய சித்திகளைப் பெற்றாலும் போகிகளுக்கு மனம் சலனமற்று அடங்கியிருக்குமென்று எண்ணுவதற்கு இடமில்லை

ஆகையால் திருநாவுக்கரசு கூறுவதுபோல் பிறவித் துன்பம் நீங்க வேண்டின்

உள்ள முள்கி யுகந்து சிவனென்று
மெள்ளவுள்க வினைகெடு மெய்ம்மையே
புள்ளி னார்பணி புள்ளிருக் கும்வேளூர்
வள்ளல் பாதம் வணங்கித் தொழுமினே.

திருப்புள்ளிருக்கும் வேளூர் - திருக்குறுந்தொகை

அஷ்டமாசித்தி பெற்றோருக்கும் வள்ளலாகிய சிவபிரான் சேவடி யடைதலாகிய ஞானம் சிறிதுசிறிதாய்ப் பெற்று வினையற்றாலன்றி முத்தி வாராதென்பது மேலோர் கொள்கையாம்.

சினத்தி னால்வரு செய்தொழி லாமவை
யினைத்து நீங்கனின் றுதர வாய்மிக
மனத்தி னன்மரு கற்பெரு மான்றிறம்
நினைப்பி னார்க்கில்லை நீணில வாழ்க்கையே.

திருமருகல் - திருக்குறுந்தொகை 3

எனையோர்க்கு "நீணில வாழ்க்கை" யுண்டென்றும்.

யோகத்திற் சிறந்த போகமாவது குவிந்த மனதைக் கொண்டு உள்ளே நிற்கும் பரமகுருவைத் தரிசித்து அவனருள் பெறுவதேயாம். அவ்வாறு பெற்றவர்கள் நமது சமயாசாரிகளாவர்.

மருவி னைமட நெஞ்சம னம்புகுங்
குருவி னைக்குணத் தாலே வணங்கிடுங்
திருவி னைச்சிந்தை யுட்சிவ னைநின்ற
வுருவி னைக்கண்டு கொண்டதென் னுள்ளமே.

தேச னைத்திரு மால்பிர மன்செயும்
பூச னைப்புண ரிற்புணர் வாயதோர்
நேச னைநெஞ்சி னுண்ணிறை வாய்நின்ற
வீச னைக்கண்டு கொண்டதென் னுள்ளமே.

உள்ளத்தொகை - திருக்குறுந்தொகை 8&9

இவ்வாறு கண்ட பரம்பொருளின் இன்பத்தை நுகர்வதே யோகசுக மாகும்.

அம்மா னையமு தில்லமு தேயென்று
தம்மா னைத்தத்து வத்தடி யார்தொழும்
செம்மா னநிறம் போல்வதோர் சிந்தையுள்
எம்மா னைக்கண்டு கொண்டதென் னுள்ளமே.

உள்ளத்தொகை-திருக்குறுந்தொகை 3.

யோகத்தில் ஞானம் :—

யோகம் ஞானமாய் முதிர்வதே யோகத்தின் ஏற்றமாம். இன்றேல், மஹேந்திரஜால வித்தையைப்போல், வெளிக்கு வேடிக்கை காட்டவும் உலகத்தில் வாணாளை வளர்த்து வீணாக்கவும் பயன்படுமன்றி முடிவில் அழிவிலா இன்பம் பெற அரிதாய்விடும்.

வெள்ள முள்ள விரிசடை நந்தியைக்
கள்ள முள்ள மனத்தவர் காண்கிலார்
அள்ள லார்வய லன்பிலா லந்துறை
யுள்ள வாறறி யார்சில மூடரே.

திரு அன்பிலாலந்துறை - திருக்குறுந்தொகை 6.

யோகமார்க்கத்தில் சித்தராய் விளங்குவோர் ஞானமடைவது ஒருநிமிஷ மென்னலாம். நம்மைப்போன்றவர்களுக்கு ஞானம் வாசா கைங்கிரியமும், சொல் மாத்திரமுமாம். அது எட்டுச்சுரை யாகுமன்றி, யாதொன்றுக்கும் பயன்படுவது அரிது. புலன்களை ஒடுக்கி, மனதைக் குவியவைத்த சித்தர்கள் பஞ்சாட்சரத்தை முறைப்படி செபித்துச் சிறிதுநேரம் சிவத்தியானத்தி லாழ்வாரானால் அப்பர் கூறும் அநுபவம் பெறலாகும் :—

மானை யேந்திய கையினர் மையறு
ஞான சோதியர் ஆதியர் நாமந்தான்
ஆன வஞ்செழுத் தோத வந்தண்ணிக்கும்
தேனர் போல்திரு நாகேச் சரவரே.

திருநாகேச்சரம், திருக்குறுந்தொகை 7.

இவ்வாறு யோகத்தின் முதிர்ச்சியினின்ற சித்தன் முழுமுதற் பொருளை உள்ளே நோக்கிக் காணுவானாயின், அதற்கு முற்பட்ட அநுபவ முழுவதும் மாறி வேற்றாருக்கொள்ளும். சுடர்க்கொழுந்திலுள்ள இருளகப் புகையானது வெளிவருங்கால் சோதியாவது போல்,

மயக்கமாய்த் தெளிவுமாகி மால்வரை வளியுமாகித்
தியக்கமாய் ஒருக்கமாகிச் சிந்தையுள் ஒன்றிநின்று
இயக்கமாய் இறுதியாகி யெண்டிசைக் கிறைவராகி
அயக்கமா யடக்கமாய வைவராப் பாடியாரே.

திரு ஆப்பாடி-திருநேரிசை 8.

என்னும் திருநாவுக்கரசின் சுவாநுபூதி காண்க.

†ஓதியே கழிக்கின் றீர்க ளுலகத்தீ ரொருவன் றன்னை
நீதியால் நினைய மாட்டீர் நின்மல னென்று சொல்லீர்
சாதியா நான்முகனும் சக்கரத் தரனுங் காணாச்
சோதியாய்ச் சுடர தானார் திருச்சோற்றுத் துறைய னாரே.

திருச்சோற்றுத்துறை - திருநேரிசை 9.

இவ்வாறு உள்ளே திகழும் பரம்பொருளைக் கண்டபின்னர் வெளியே காணப்படும் பொருள்களை நோக்குழி, உள்ளேகண்ட சோதிவடிவமாய் யாவும் திகழும்:-

உள்ளுமாய்ப் புறமு மாகி யுருவமா யருவுமாகி
வெள்ளமாய்க் கரையு மாகி விரிகதிர் ஞாயிறாகிக்
கள்ளமாய்க் கள்ளத் துள்ளார் கருத்துமா யருத்தமாகி
யள்ளுவார்க் கள்ளல்செய்திட் டிருந்தவாப் பாடியாரே.

திரு ஆப்பாடி - திருநேரிசை 7.

ஊனவ ருயிரினோடு முலகங்க ளூழியாகித்
தானவர் தனமு மாகித் தனஞ்செய னோடெ திர்த்த
கானவர் காள கண்டர் காஞ்சிமா நகர்த னுள்ளா
ரேமனப் பூண்பா ரிலங்குமேற் றளிய னாரே.

திருக்காஞ்சித் திருமேற்றளி - திருநேரிசை 5.

உள்ளே அணுவுக் கணுவாய்த் தரிசனந்தந்து பிறகு வெளியில் நோக்குங்கால் அதுவே மகத்துக்கு மகத்தாய்த் திரண்டும், அற்ப உயிர்களின் தளையாயும் பல உயிர்களாய் உலகத்தில் காணப்படும் உலகைப்பற்றி விடாது கௌவிக் கொண்டு மிகவும் வலிய சத்தாய்ச் சோதி சொரூபமாய் உலகத்தில் அறிவான கண்ணாகி என்றும் மாறாத அளக்கலாகாச் சொரூபத்தைக் கண்டு ஆநந்தித்த அப்பமூர்த்தி தன் ‡சுவாநுபூதியைத் திருக்கயிலாயப் போற்றித் திருத்தாண்டகத்தில் பாடும் பாசுரங்களின் சொற்றொடர்களா லறிக:—

‡பேரின்ப வீடாகிய இந்த நிலையின் இலக்கணத்தைப் பகர அடியேன் புன்சொல் எட்டாததலால், பெருந்தகையாகிய வாகீசர் திருவாக்காலே இதை விளக்கவேண்டியிருக்கின்றது. திருநாவுக்கரசின் சொற்றொடர்களை நிதானமாய் ஊன்றி நோக்குக. கைலாயப் போற்றித் திருத்தாண்டகம் வீட்டின் சொரூபத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கும். ஆயினும் அதன் ஆழம் சொல்லொணாததே.

சில்லு ருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவரறி யாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறு நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. (1)

வானத்தார் போற்று மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கு முடலே போற்றி
யோங்கி யழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 2

இமையா துயிரா திருந்தாய் போற்றி
யென்சிந்தை நீங்கா விறைவா போற்றி
உமைபாக மாகத் தணைந்தாய் போற்றி
யூழி யேழான வொருவா போற்றி
அமையா வருநஞ்சம் ஆர்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 3

மூவாய் பிறவா யிறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா வடியேனுக் கெல்லாம் போற்றி
யல்லல் நலிய வலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 4

முன்பாகி நின்ற முதலே போற்றி
மூவாத மேனி முக்கண்ணா போற்றி
அன்பாகி நின்றார்க் கணியாய் போற்றி
யாறேறு சென்னிச் சடையாய் போற்றி
என்பாக வெங்கு மணிந்தாய் போற்றி
யென்சிந்தை நீங்கா விறைவா போற்றி
கன்பாவி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 5

இத்தகைய சிவஞானத்தைத் திருநாவுக்கரசு நாயனார் சமணமதத்தைக் கைவிட்டுத் திருநீறணிந்து சைவரான காலத்திலேயே பெற்றனரென்பதற்கு ஐயுறவு இல்லை. பல்லவன் அனுப்பிய அத்தூதர்களை நோக்கி மொழிந்த திருமறுமாற்றத் திருத்தாண்டகத்தில் தன் ஞானநிலையின் தன்மையை உணர்த்துகின்றார்.

நிற்பனவு நடப்பனவு நிலனு நீரு
நெருப்பினொடு காற்றாகி நெடுவா னாகி
யற்பமொடு பெருமையுமா யருமை யாகி
யன்புடையார்க் கெளிமையதா யளக்கலாகாத்
தற்பரமாய்ச் சதாசிவமாய்த் தானுமியானு
மாகிநின்ற தன்மையினை நன்மையோடு
பொற்புடைய பேசக் கடவோம் பேயர்
பேசுவன பேசுதுமோ பிழையற்றோமே.

திருமறுமாற்றத் திருத்தாண்டகம் 7.

இதையே வேறு விதமாய்த் தாயுமானவரும் பின் வருமாறு கூறுவார்.

ஆரா ரெனக்கென்ன போதித்து மென்னவென்
னறிவினை மயக்க வசமோ
அண்டகோ டிகளெலாங் கருப்பவறை போலவும்
அடுக்கடுக் காயமைத்துப்
பேராமல் நின்றபர வெளியிலே மனவெளி
பிறங்குவத லாதொன்றிலும்
பின்னமுற மருவாது நன்னயத் தாலினிப்
பேரின்ப முத்தி நிலையுந்
தாராது தள்ளவும் போகா துனலது
தள்ளினும் போகேனியான்
தடையேது மில்லையான் டவனடிமை யென்னுமிரு
தன்மையிலு மென்வழக்குத்
தீராது விடுவதில்லை நடுவான கடவுளே
தேடரிய சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோன்ம யானந்தமே.

தேசோன்மயானந்தம் 7.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[486-வது பக்கத் தொடர்ச்சி]

5. மந்திரசாலைச் சருக்கம்

255. இறையிவை மொழியக் கேட்டே
இருந்தவ ரிறைஞ்சி யேத்தி
அறைகழ லரவத் தானை
அணிமுடி யரச ரேறே
நிறைபுக ழுலகங் காத்து
நிலாகநின் னிறைமை யென்று
முறைமுறை மொழிய லுற்றா
முன்னிய முகத்த ரானர். 18.

இறை - அரசன், இவை மொழியக் கேட்டு - இவ்வாறு சொன்னதைக் கேட்டு, இருந்தவர் - மந்திராலோசனை சபையிலிருந்த மந்திரிமார்கள், இறைஞ்சி ஏத்தி - அரசனை வணங்கித் துதித்து, 'அறைகழல் - ஒலிக்கின்ற வீரக்கழலையும், அரவம் தானை - சத்தத்தையுடைய சேனைகளையும், அணிமுடி - அழகிய கிரீடத்தையு முடைய, அரசர் ஏறே - அரசர்களுக்குள் சிங்கம்போன்றவனே, உலகங் காத்து - உலகத்தைப் பரிபாலித்து, நின் இறைமை - நினது அரசு, நிறைபுகழ் நிலாக - நிறைந்த புகழுடன் நீடித்து நிலைத்திருப்பதாக,' என்று - என்று வாழ்த்தி, முறைமுறை - ஒருவர்பின்னொருவராக, முன்னிய முகத்தர் ஆகி - அரசன் முகத்தை நோக்கிநின்று, மொழியல் உற்றார் - கருத்தைத் தெரிவிக்கத் தொடங்கினர்.

. அரவம் - ஒலி, நிலாக - நிலாவுக, ஒளிர்க, விளங்குக என்றுவது, நிற்பதாக, நிலைத்திருப்பதாக என்றுவது

இருவகையாகவும் பொருள் கொள்ளலாம். முன்னிய - அரசன் முகத்தை எதிர் நோக்கிய.

---

256. பணிந்துமற் றேனை யார்பாங்
கிருப்பநூல் பலவு நோக்கித்
துணிந்துதன் புலமை தோன்றச்
சுச்சுதன் சொல்ல லுற்றான்
இணைந்துநின் றுலவுந் தும்பி
இடையிடை யிருண்டு தோன்ற
அணிந்துநின் றலரும் பைந்தா
ரணிமணி முடியி னுற்கே. 19.

பணிந்து ஏனையார் பாங்கு இருப்ப - மேற்சொன்னபடி மன்னனைப்பணிந்து மற்றையமந்திரிகள் தன்பக்கத்தில் இருக்க, சுச்சுதன் - சுச்சுதன் என்பவன், இணைந்து நின்று உலவும் தும்பி - ஆணும் பெண்ணுமாகக் கூடித் திரியும் வண்டுகளை, இடையிடை இருண்டு தோன்ற - இடையிடையே இருண்டு தோன்றும்படி, அணிந்து நின்று அலரும் - அணிந்து நின்று மலர்ந்த, பைந்தார் - பசுமையான மாலையையும், அணிமணி முடியினுற்கு - அழகிய மணிகளிழைத்த கிரீடத்தையும் அணிந்த அரசனுக்கு, நூல் பலவும் நோக்கி - நூல்கள் பலவற்றின் கருத்தையும் ஆய்ந்து பார்த்து, துணிந்து - துணிவுடன், தன் புலமை தோன்ற - தனது அறிவு புலப்பட, சொல்லல் உற்றான் - பின்வருமாறு சொல்லத் தொடங்கினன்.

---

257. பொழிற்கதிர் பரப்பி வந்து
பொங்கிருள் புதைய நூறும்
தொழிற்கதிர்க் கடவு டோன்றச்
சூரிய காந்த மென்னும்
எழிற்கதிர்ப் பிறங்கல் வட்டம்
எரியுமிழ்ந் திடுவ தன்றே
அழற்கதி ரிலங்குஞ் செவ்வே
லதிர்கழ லரசர் கோவே. 20.

அழல் கதிர் இலங்கும் - நெருப்பின் சுவாலை விளங்கும், செம் வேல் - செவந்த வேலாயுதத்தையும், அதிர் கழல் - ஒலிக்கின்ற வீரக்கழலையும் அணிந்த, அரசர் கோவே - அரசர்களுக்கெல்லாந் தலைவனை அரசனே, 'பொழில் - சோலைகளில், கதிர் பரப்பிவந்து - கிரணங்களைப் பரப்பிக்கொண்டுவந்து, பொங்கு இருள்புதைய நூறும் - பொங்கியெழும் இருட்டை ஓடிமறையும்படி அழிக்கும், தொழில் கதிர்க்கடவுள் - தொழிலையுடை சூரியன், தோன்ற - எதிரே தோன்றினுல் சூரிய காந்தம் என்னும் - சூரிய காந்தம் என்று சொல்லப்படும், எழில் கதிர் பிறங்கல் வட்டம் - அழகிய காந்தி விளங்கும் வட்டமான பளிங்குக்கல், எரி உமிழ்ந்திடுவது அன்றே - நெருப்பைக் கக்கும் தன்மைத்தல்லவா?'

---

258. கோணை நூற் றடங்க மாட்டாக்
குணமிலார் குடர்க ணைய
ஆணை நூற் றடங்கக் காக்கு
மரசர்த மருளி னாலே
பேணு நூற் புலவர் மாண்பும்
பெருகுவ தருவத் தார்மேற்
பூணு நூற் பொலிந்து தோன்றும்
பொன்வரை மார்ப வென்றான். 21.

உருவம் தார் மேல் - அழகிய மலர்மாலையின் மீது, பூணு நூல் - பூணூல், பொலிந்து தோன்றும் - அழகுற விளங்கும், பொன்வரை மார்ப - மேருமலையை யொத்த மார்பினையுடைய மன்னனே, ஐநூறுகோண் - பலதூர்க் குணங்களையுடைய, அடங்கமாட்டா - ஒருவருக்கும் அடங்காத, குணமிலார் - நற்குணம் யாதொன்றும் இல்லாத தீயோர், குடர்கணைய - உடல்வருந்தும்படி, ஆணை நூற்று - தமது ஆணையைச் செலுத்தி, அடங்க - அடக்கி, காக்கும் - நல்லோரைக்காக்கும், அரசர் தம் அருளினாலே - அரசனுடைய ஆதரவாலேயே, பேணும் நூல் புலவர் மாண்பும் - நீதி நூல்களை விரும்பிக் கற்றுணர்ந்த அறிஞராகிய மந்திரிகளின் மேன்மையும், பெருகுவது — அதிகரிப்பதாகும், என்றான் - என்று சொன்னன்.

சுடர்கள், ஆகுபெயர். அடங்கக் காக்கும் - துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனம். 'பொன்வரை, திருமகளைக் கொண்ட, என்றுமாம்.

---

259. சூழ்கதிர்த் தொழுதி மாலைச்
சுடர்ப்பிறைக் கடவு டோன்றித்
தாழ்கதிர் சொரிந்த போழ்திற்
சந்திர காந்த மென்னும்
வீழ்கதிர் விளங்கு வட்டம்
வெள்ளநீர் விரியு மன்றே
போழ்கதிர் பொழிந்து பொங்கிப்
புலாணிணம் பொழியும் வேலோய்.

போழ்கதிர் பொழிந்து - இருளைப்பிளக்கும் கிரணங்களை நிறைத்து, பொங்கி - மேலெழுந்து, புலால் நிணம் பொழியும் - தசைப் புலால் நாற்றத்தை மிகுதியாக வீசும், வேலோய் - வேலையேந்தியவனே, சூழ்கதிர்த் தொழுதி - சூழ்ந்த கிரணங்களின் கூட்டத்தையுடைய, சுடர் பிறை கடவுள் - ஒளிபொருந்திய பிறைச்சந்திரன், மாலை தோன்றி - இரவில் உதித்து, தாழ்கதிர் சொரிந்த போழ்தில் - கீழிறங்கும் நிலாவைப் பொழிந்தபோது, சந்திரகாந்தம் என்னும் - சந்திர காந்தமென்று சொல்லப்படும், வீழ்கதிர் விளங்கு வட்டம் - யாவராலும் விரும்பப்படும் காந்தியோடு கூடிய பளிங்கு வட்டக்கல், வெள்ளநீர் விரியும் - மிக்க நீரைச் சொரியும், அன்றே - அல்லவா?

தொழுதி - திரள், கூட்டம். வீழ்தல் - விரும்புதல். நிணம் புலாலைப் பொழியும் என்க.

---

260. கண்ணளித் துலக மெல்லாம்
கவின்பெறக் காவல் பூண்டு
தண்ணளித் தயங்குஞ் செங்கோற்
றாரவர் தவத்தி னாலே
மண்ணளித் தினிய நூலோர்
மந்திர மலரு மென்றான்
விண்ணளித் திலங்கும் வெள்ளி
விரிந்தவெண் குடையி னுற்கே. 23.

கண் அளித்து - கடைக்கணித்தருளி, உலகம் எல்லாம் - உலகங்களை யெல்லாம், கவின்பெற - அழகுபெற, காவல்பூண்டு - அரசாட்சி புரிந்து பாதுகாத்து, தண் அளி - குளிர்ந்த கருணை, தயங்கும் - விளங்கும், செங்கோல் - செங்கோன்மை பொருந்திய, தாரவர் - மன்னர்களின், தவத்தினாலே - புண்ணிய விசேஷத்தால், இனிய நூலோர் மந்திரம் - உயிர்க்கெல்லாம் இன்பம் பயப்பதாகிய நீதி நூலறிஞராகிய மந்திரிகளின் (நல்ல) ஆலோசனையால், மண் அளித்து - உலகத்துக்கு இதம்புரிந்து, மலரும் - சிறந்து விளங்கும் என்று, விண் அளித்து இலங்கும் - விண்ணிலுள்ள வித்தியாதரவுலகத்தைக் காத்து விளங்கும், வெள்ளி - வெள்ளியாற் செய்த காம்பையுடைய, விரிந்த - விரிந்தகன்ற, வெண்குடையினுற்கு - வெண்மையான குடையை ஏந்திய மன்னனுக்கு, என்றான் - சொன்னன்.

முத்துவேய்ந்த வெண்பட்டுக்குடை யாதலின் 'வெள்ளி வெண்குடை' என்றார்.

---

261. கண்ணிய கடாத்த வேழக்
கவுளினு லுரிஞப் பட்டுத்
தண்ணிய தன்மை நீங்காச்
சந்தனச் சாதி போலப்
புண்ணியக் கிழவர் கீழோர்
பிழைத்தன பொறுப்ப வாயின்
மண்ணியல் வளாக மெல்லாம்
வழிநின்று வணங்கு மன்றே. 24.

கடாத்த வேழம் கவுளினுல் - மதநீரையுடைய யானையின் கன்னத்தால், உரிஞப்பட்டு - தேய்க்கப்பட்டும், தண்ணிய தன்மை நீங்கா - தனது குளிர்ந்த குணம் நீங்காத, கண்ணிய சந்தனம் சாதிபோல - பெருமைவாய்ந்த சந்தனமரத்து இனம்போல, புண்ணியம் கிழவர் - முற்பிறப்பில் தாம் செய்துள்ள புண்ணியத்தின் பயனைப் அரசுரிமையைப் பெற்றவர், கீழோர் பிழைத்தன பொறுப்ப ஆயின் - கீழோர் தமக்குச் செய்ததவறுகளைப்பொறுத்து மன்னித்திடுவாராயின், மண்ணியல் வளாகம்எல்லாம் - இப்பூமண்டலம் முழுதும், வழிநின்று - அவர் குறிப்பின்வழி ஒழுகி, வணங்கும் - அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும், அன்றே - அல்லவா ?

கண்ணியம் - மதிப்பு, பெருமை. சாதி - இனம், மரத்தினம்.

---

262. நிறந்தலை மயங்க வெம்பி
நெடுங்கடல் சுடுவ தாயின்
இறந்தலை பெருகு நீர்வா
ழுயிர்க்கிட ரெல்லை உண்டோ ?
மறந்தலை மயங்கு செவ்வேல்
மன்னவன் வெய்ய னாயின்
அறந்தலை மயங்கி வையம்
அரும்பட ருழக்கு மன்றே. 25.

நிறம் தலைமயங்க வெம்பி - தனது இயற்கைக்குணமாகிய குளிர்ச்சிகெட்டு வெதும்பி, நெடுங்கடல் - பெரிய கடலானது, சுடுவது ஆயின் - சுடுமாயின், இறந்து அலை பெருகும் நீர் - அளவுகடந்து அலைகள்எழுங் கடலில், வாழ் உயிர்க்கு - வாழும் ஜந்துக்களுக்கு, இடர் எல்லை உண்டோ - உண்டாகும் துன்பத்துக்கு முடிவுண்டோ? இல்லையாம். அதுபோல, மறம் தலைமயங்கு - கொடுமை பொருந்திய, செம்மை வேல் மன்னன் - இரத்தத்தாற் செவந்த வேலையுடைய மன்னன், வெய்யன் ஆயின் - கொடியவனுய்விட்டால், அறம் தலைமயங்கி - தருமங்கள் கெட்டு, வையம் - அவனுடைய நாட்டில் வாழுங் குடிகள், அரும் படர் உழக்கும் - நீக்கரிய பெருந் துன்பத்தை அனுபவிப்பார்கள்.

நிறம் - குணம், தன்மை, நிறம். அறம் தலைமயங்கல் கெடுதல். மறம் தலைமயங்கல் - தலைமயங்கல், பொருந்தல். தலையென்பது ஒரு தமிழுபசருக்கும்.

---

263. மண்குளிர் கொள்ளக் காக்கும்
மரபொழிந் தரசர் தங்கள்
விண்குளிர் கொள்ள வோங்கும்
வெண்குடை வெதும்பு மாயின்
கண்குளிர் கொள்ளப் பூக்குங்
கடிகயத் தடமுங் காவும்
தண்குளிர் கொள்ளா தாயின்
தான்மிக வெதும்பு மன்றே. 26.

கண் குளிர்கொள்ள - கண்குளிரும்படி, பூக்கும் கடி கயத்தடமும் காவும் - பூக்கள் பூத்த வாசனையோடு கூடிய தடாகங்களும் சோலைகளும், தண் - நீர், குளிர் கொள்ளா தாயின் — குளிர்ச்சியடையாதாயின், தான்மிக வெதும்பும் - தாம் மிகவும் வெப்பத்தால் பொலிவழிந்து கெட்டுவிடும். அதுபோல, மண் குளிர்கொள்ள - மண்ணுலகில் வாழும் மாந்தர் மனமகிழும் வண்ணம், காக்கும் - அவர்களைப் புரந்தளிக்கும், மரபு ஒழிந்து - தன்மை நீங்கி, விண் குளிர் கொள்ள ஓங்கும் - ஆகாயத்திலுள்ள மேகங்களின் குளிர்ச்சியைத் தான் பெறும்படி உயர்ந்தெழுந்த, அரசர்தங்கள் வெண்குடை - அரசர்களின் வெண்கொற்றக்குடை, வெதும்புமாயின் - நிழலைத் தாராது வெப்பத்தைச் செய்யுமாயின், தான் மிகவெதும்பும் - அவன் நாட்டில்வாழும் ஜனங்கள் மிகவும் வருந்துவார்கள்.

'தான் மிகவெதும்பும்' என்பதை மேலே'குடைவெதும்புமாயின்' என்பதனேடும் கூட்டுக.

---

264. தீயினம் படர்ந்து வேந்தன்
செறுவதே புரியு மாயின்
போயினம் படர்ந்து வாழும்
புகலிட மின்மை யாலே
வேயினம் படர்ந்த சாரல்
வேங்கையை வெருவிப் புல்வாய்
மாயினம் படர்ந்த தெல்லாம்
வையகம் படரு மன்றே. 27.

தீ இனம் படர்ந்து - தீயோர்களின் துர்ப்போதனையைக் கேட்டு, வேந்தன் - அரசன், செறுவதே புரியும் ஆயின் - வருத்துஞ் செயல்களையே செய்வானுயின், இனம் - மனிதர் தொகுதி, போய்ப் படர்ந்து வாழும் - அவன் நாட்டை விட்டுப்போய் வாழத்தக்க, புகல் இடம் - காவலிடம், இன்மையாலே - வேறொன்றும் இல்லாமையாலே, வேய் இனம் படர்ந்தசாரல் வேங்கையை வெருவி - மூங்கில்கள் நெருங்கிய மலைச்சாரலிடத்திலே வாழும் வேங்கைப் புலிக்குப் பயந்து, புல்வாய் மா இனம் - மான் முதலிய விலங்குகளின் தொகுதி, படர்ந்த எல்லாம் - பட்ட துன்பங்களையெல்லாம், வையகம் படரும் - மனிதர்களும் பட்டு வருந்துவார்கள். அன்று, ஏ அசை.

தீயினம் படர்ந்து - தீக்குணங்கள் நிறைந்துபொருந்தி என்றுமாம். 'மாவினம்' எனற்பாலது எதுகை நோக்கி, மாயிருஞாலம் என்றாற்போல, 'மாயினம்' என்றாயிற்று.

நவராத்திரி

[ஓர் நாடகம்]

[487-வது பக்கத் தொடர்ச்சி]

குஞ் :—இங்கேயா இருக்கிறாள் ?—அம்மா ! எழுந்திரு ! இதோ நான் வந்துவிட்டேன்—எனக்காகவா அழுகிறாய்(காமுவின் கையைப் பிடித்துத்தூக்கி, தலையை நிமிர்த்தி) ஐயையோ இவளா ? அம்மா எங்கே ?

காமா :—(எழுந்து) கெட்டுப் போக்கிவிட்டாயா-அம்மாவை ?

குஞ் :—ஆமாம்! அம்மாவைக் காணோமே! எங்கே?

துரை :—ஓடிவரும்போது வழியில் உன் கைதவறி விழுந்துவிட்டதா !

குஞ் :—நான்தான் கால்தவறி விழுந்துவிட்டேன் , அம்மாதான் எங்கேயோ ஓடிப்போய்விட்டாள் !

[சுபத்திரை இடப்புறத்திலிருந்து வருகிறாள்.]

சுப :—ரகைஷ இன்னும் கட்டவில்லையா ? இன்னும் அப்படியே பிதற்றுகிறாளே !

குஞ் :-அம்மா! அம்மா!! (சுபத்திரையினிடம் ஓடி) எங்கே போயிருந்தாய் ?

சுப:-உனக்கும் மாமாவுக்கும் காப்பிபோடப்போயிருந்தேன்; மாமாவைக் கூட்டிக்கொண்டு வா, போ! —வேண்டாம்—நான் இடுப்பில் எடுத்துக்கொள்கிறேன்—வா - (எடுத்துக் கொள்ளப் போகையில்)

குஞ் :—அம்மாவுக்குக் காபி எங்கே ? அம்மாவை முதலில் அழைத்துவா ! அம்மாவுக்குக் கொடுக்காமல் நீங்களே கொட்டிக்கொள்கிறீர்களா ?

[பின்வாங்குகிறாள்.]

துரை:—சரி, என்ன செய்ய ?—வேறு ஒன்று தருகிறேன்.

காமா:—குஞ்சு ! பொம்மையை எங்கே போட்டாய்? சொல்லு நினைவாய், நானும் வருகிறேன்...

குஞ் :—பொம்மையா ? என் கையில் பொம்மையேது?

துரை :—பார்த்தீர்களா ! பொம்மையைத் தன் தாயென்றே கருதுகிறாள் ?

சுப :—ஐயையோ இன்னும் கேடல்லவோ...

காமா :—எப்படியோ, அம்மா என்று அலறுதலடங்கட்டும் - போதும்....

துரை :—எங்கே போட்டாய் ?

காமா :—முள்ளிலே, புதரிலே, போட்டாயா? விளையாடிக்கொண்டிருந்தபோது கைதவறி நீ போட்ட இடத்தைக் காட்டு. நான் எடுத்துத் தருகிறேன் உன் அம்மாவை !

குஞ்:—அம்மா எங்கே ? எங்கே அம்மா ?

சுப :—திருப்பியும் முன்போலவே...?

காமா :—மந்திரித்துக் கொடுத்த மாய பொம்மை அது! காணாமற் போக்கினால் எப்படி எவ்வளவு பொம்மைகளை மந்திரிக்கிறது ?...

சுப :—கொலுப் பொம்மைகள் எல்லாவற்றையும் மந்திரிக்க வேண்டும் (சிரிக்கிறாள்)

காமா :—நாமே போய்த் தேடலாம் வா-சுபத்திரை நீயும்....

சுப :—எதுமாதிரிப் பொம்மை? என்ன பேர் ?

காமா :—பேரென்னவோ மாயாண்டியைக் கேட்டால் தெரியும். ஏனம்மா-மாயாண்டியிடம் கொடுத்தாயோ குஞ்சு ?

குஞ் :—எதை !

குரல் :—என்னிடம் தரவில்லையே, அவளே தான் கொண்டுபோனாள் !

காமா :—பின் எங்கே போட்டாய் ?

[மாயாண்டி வலப்புறத்திலிருந்து வருகிறான்]

பொம்மையை எடுத்துக்கொண்டு எந்தப்பக்கம் முதலில் போனாளிவள் ? பார்த்தேனென்றாயே ?

மாயா :—இவளல்ல, அந்த முச்சக்கரக்காரி.

சுப :—அவளா ? தலுக்கப் பெண்ணா ?

மாயா :—பின் யார்? நான் வாசல்கதவுமேல்மோதிக் கொள்ளும்போது அவள்தான் பங்களாவுக்குள் பொம்மையுடன் நுழைந்துவிட்டாளே ?

துரை :—இந்தப் பெண், தொடவேயில்லை ?...

மாயா :—இவள்தான் வேண்டாம் என்று தூக்கி எறிந்தாளே! இவள் ஏன் தொட வருகிறாள்-பைத்தியம் பிடித்திருக்கிறதா உங்களுக்கு ? உங்களை யல்ல, சாமி, இந்த அம்மாவைச் சொன்னேன் !

காமா :—(சோர்வோடு) எல்லாம் வீண் !

மாயா !—நானிருக்கிறேன், போய்க் கொணர்கிறேன் அதை ! (இடப்புறம் மறைகிறான்)

துரை :—அயரவேண்டாம்! கொலுநிறையப் பொம்மைகள் இருப்பதாகச் சொன்னீர்களே, மந்திரித்துவிடுவோம்...

சுப :—இந்தப் பொம்மையையே தொடாதவள் ஊரிலுள்ள எல்லாப் பொம்மைகளுந்தான் வரட்டுமே திருந்தப் போகிறாளா ?

காமா :—என் கோவத்தைக் கிளப்பாதே-எரிகிறது வயிறு....

சுப :—காப்பி போட்டாச்சு !

துரை :—உருமபிள்ளை எங்கே ?

காமா :—உன்னைக் கூப்பிட வரவில்லையோ அவன்?

சுப :—யாரு— அவனா—(தூர நகர்கிறாள்)

காமா :—சாமி—வீபூதி கொடுக்க மாட்டீர்களா ? எனக்கு எத்தனை பிள்ளைகுட்டிகள் சொல்லுங்கள் !

சுப :-உனக்கே தெரியாதா?—அழகு! (சிரிக்கிறாள்)

குஞ்சு—அதோ—அங்கே-மாமா வருகிறார்—காப்பி குடிக்கக் கூப்பிடு, காப்பி !

காமா :—அவனுக்காகத்தான் போடச் சொன்னேனே—பழிகாரி.

குரல் :—இங்கு வந்திருக்கிறாளா ? என் நாக்கு வறண்டுஉதிர்ந்துவிடும்போலிருக்கையில், அவனுக்குக் கொட்ட (உருமப்பிள்ளை வருகிறான்)

சுப :—உமதிஷ்டம்—நான் ஒருதுளி குடிக்கவில்லை குடிப்பதில்லை—நான் வீடுபோகிறேன் பாட்டி! குஞ்சு போய்வருகிறேன், சமத்தாயிரு !..........

குஞ் :—நானும் வருகிறேன், உன்னுடன் !

உரு :—என்ன அம்மா—சாமியார் காக்கிறாரே—மோட்டாரும் நிற்கிறது....சீக்கிரம்......

துரை :—டேடீடா ! சிவப்புக் காகிதத்தில் சுற்றி வைத்திருக்கிறேனே மோட்டாரில்...அதைக் கொண்டுவா ?

உரு :—எதற்கு ! என் மகள் பாலாமணிக்கு அல்லவோ வாங்கியிருக்கிறேன்......

குஞ்சு:—அம்மா எங்கே? அம்மா பாலாமணியுடன் பேசிக்கொண்டிருக்கிறாளா ?

துரை:—பார், இன்னும் முழுதும் ஏறவில்லை மந்திரம், அதனையும் மந்திரிக்க வேணும்.

குரல்:—இன்னொரு பொம்மையா?

காமா:—கோவிக்காதேயம்மா - சற்றிரு- குஞ்சுவும் சாந்தமாய் நிற்கிறாள் உன்னிடம்!

[வலப்புறத்திலிருந்து தியாகு வருகிறான்]

சுப:—சரி, நல்ல சாக்கு அகப்பட்டது.(சிரிக்கிறாள்)

உரு:—முதலில் காப்பியைத் தாருங்கள் !

காமா:—சனியன் இவன் வந்தானிப்போ (உரக்க) சரி வர உள்ளே - சாமியாரை அழைத்துவா! வா, ஆறிப் போவதற்குமுன் குடித்துவிடலாம் வா, குஞ்சு!

குஞ்சு:—எதற்கு?

காமா:—அப்பம் தருகிறேன்.

உரு:—எழுங்கள் சாமியாரே—வாருங்கள். .பாவம் பட்டினி—சாகாக்குறையாய் மெலிந்து—

தியா:—துறவி செய்யும் பாரணை யிதுவாம்!

துரை:—உள்ளே, துர்க்காதேவி படமிருக்கிறதா?

காமா:—மாட்டியிருக்கிறது ! அங்கேயே பூஜையை நடத்தலாம்.

[துரைசிங்கனும் உருமபிள்ளையும் முன் செல்ல, பின் செல்கையில்]

நீயும்வா அம்மா!

சுப:—எனக்கு வேண்டாம்!

காமா :—நீ தினம் குடிக்கின்றாயா என்ன! உனக்கெதற்கு? குஞ்சுவைக் கூப்பிடு !

குஞ் :—அம்மாவை முதலில் கொண்டுவா !

காமா:-உள்ளேயிருக்கிறாள் வா! சுபத்திரை,மெள்ள அவளை உள்ளே இழுத்துக்கொண்டு வந்துவிடு !... அங்குமிங்கும் ஓடவிடாதே !

சுப :—நான் பார்த்துக்கொள்கிறேன்-அதோ அவரைக் கூப்பிடவில்லையே !

காமா :—யாரை ? அவனையா (உள்ளே மறைகிறாள்)

தியா :—நீங்கள் தனியாய் இங்கிருக்கவேண்டும் என்றால் இதோ நான் போய்விடுகிறேன்...மனமில்லாதாரை எனக்கு விருந்துசெய்ய வற்புறுத்துவானேன்.

சுப: —(தன் மறைவில்)உங்களுக்காக என்றல்லவோ அவசரம் அவசரமாய்ப் பாட்டிக்குந் தெரியாமல் நான் காப்பி போட்டேன்...

தியா :—தெரியாமலா—

குஞ் :—நான் ஓடிப்போய்விட்டபோதா ?...

சுப :—எங்கு ஓடிவிட்டாய்—எங்கெங்கெல்லாம் தேடினோம் !

தியா :—பாட்டி உன்னை அடிக்கிறாளா, மிரட்டுகிறாளா ? ஏன் ஓடிப்போகிறாய் ! என்னுடன் வருகிறாயா?

குஞ் :—அம்மாவைக் காட்டுகிறாயா ?

தியா :(கண்கலங்கி) சுதந்திரத்தின்மேல் என் அன்பு போல் வேறில்லை என்றெண்ணினேன்—இவள் அன்பு என்னே ! எப்பொழுதும் அவ் அன்னையே நினவு—தவம்! மீண்டும் வருவளோதான்!

சுப :—(தானும் அழுவதால், கண்ணைத்துடைத்துக் கொண்டு) மாமா, அம்மாவைக் காட்டுவார். அவருடன் போ !

தியா :—எங்களிருவர் சாயலும் ஒன்றே—எனது தங்கையை நீங்கள் பார்த்ததுண்டோ ?

சுப :—விடா நட்பே ! எனக்குக் கடிதங்கள் கூட எழுதுவாள் — தபால்தலைகளுந் தானே அனுப்பிப் பதில்கள் ஈர்த்துவலித்து எனக்குத் தெரிந்த பாட்டுக்கள் கும்மிகள் அனைத்தையும் பொன்னியும் கற்றுக் கொண்டிருக்கிறாளே—

தியா :—(முகமலர்ந்து) அந்தப் பெண்ணா, நீ? ஊர் என்ன ?—ஆம்......திருச்செந்துறை யல்லவா ?

சுப :—ஆம் !

தியா :—பெபர்—(வெட்கத்துடன்) சுபத்திரை யல்லவா ?

சுப :—(முகமலர்வுடன்) இதையெல்லாம் சொல்லியிருக்கிறாளா ?

தியா:—அந்த ஏழைப் பெண்ணா நீ...தபால் தலைகளைக் கூடப் பொன்னியே அனுப்பும்படி வந்ததே—நாட்டின் ஏழையர் கதி இதுவே என்று அன்று நான் கண்ணீர் துளித்தேன்! உண்மை நட்பு வளர்ந்தோங்க இடமின்றி உயிரற்ற பொம்மைகளாய்—பொம்மை விவாகங்களே மலிந்த........நாட்டில்......

குஞ்:—அம்மா பேர்-பொன்னிதானே—பொன்னி தானே—பொன்னி! பொன்னி! (உரக்கக் கூவுகிறாள்)

சுப:-(கண்ணைத்துடைத்துக் கொண்டு) தன் தாயையே பேர் சொல்லிக் கூப்பிட்டுப் பார்க்கின்றது இந்தக் குழந்தை. அம்மா என்றால் ஏன் என்னுததாலோ.

தியா : —என்னுடன் ஆற்றங் கரைக்கு வா, காட்டுகிறேன்.

குஞ்: —ஆமாண்டி ! ஆற்றங்கரைக்கே அவளை ஏணிமேலே கொண்டுபோனார்கள்—காட்டுகிறாயா?

தியா: —காட்டுகிறேன்—பொன்னியே! வா!

சுப:—பாவம், இவர்கள் பொம்மையைக் கொடுத்து ஏமாற்றுவது போலேதான் தாங்களும் காவிரியைக் காட்டி "பொன்னி ' இதோ என்பது!

குஞ் :—பொய்யா நீ சொன்னது ? நான் உன்னுடன் வரமாட்டேன் !

சுப ;—நீ வராவிட்டால் போ, நான் அவருடன் அவரூருக்குப் போகிறேன்.

தியா :—(சிரித்து)ஆமாப ! நான் அவரை இட்டுக் கொண்டு போகிறேன்—நீ வேண்டாம் !

சுப :—(சிரிப்பை யடக்கமுடியாமல்) எனக்கென்ன மரியாதை ? தரித்திரக்குப்பைக்கு—கிழிச்சற் கந்தைக்கு ! மூளி மொட்டைக்கு !

குஞ் :—மாமி, உங்கம்மாளிடம் நீங்கள் போவது தானே!—உங்கம்மா எங்கே, காணோம் ?

தியா :-சீ ! அப்படி எல்லாம் கேட்கலாமா மாமியை?

சுப :—(சிரித்துக் கொண்டே) குழந்தைக் கென்ன தெரியும்...வா, எங்கம்மாவைக் காட்டுகிறேன்-நாலு பங்களா தாண்டினால் போதும்.

தியா:--முட்டாள்-அவளை அடக்கப் பார்த்தேனே-அவள் கருதாக்கருத்தை நான் கற்பித்துங் குழந்தை வார்த்தையில் குற்றம் காண்பதா! இப்படி அடங்கி அடக்கித்தான் கெடுகின்றன குழந்தைகள்...

சுப:-இப்பொழுது நான் இவளை எடுத்துக்கொண்டு போனால் இறந்தவளை விளையாட்டுக்காட்டி மறக்கடிப்பேன்—ஆனால் இவர்கள் சீறுவார். பாவம் குழந்தையோ படாதபாடு படுகிறது.

தியா:—நீங்கள் இறங்கியிருக்கும் பங்களா எது? உம் தாயாரைக் காணலாமா நான்? (சிரிக்கிறான்)

சுப:—எதற்கு?

தியா:—தந்தையைக் காணலாமா-திருச்செந்துறையில்தா னிருக்கிறாரா?

சுப:—நாங்கள் மட்டுந்தான் வந்தோம்—நவராத்திரிப் பண்டிகைக்குச் சுமங்கிலிப் பெண்ணுக்குத் தரும் புடவையைப்பெற என்னழைத்தாய் வந்தாள்—நானும் உடன் வந்தேன்.

தியா:—எந்தப்பங்களாசொல்லுங்கள்!போகிறேன்.

[ராஜீயா சைகிள்மீது வருகிறாள்]

ராஜீ:—அதே பங்களாதான், வாங்கள். அப்பா காத்துக்கொண்டிருக்கிறார்......

தியா:—நான் வரமாட்டேன்—சும்மா பேசிப்பேசி என்ன பயன்? சுயராஜ்யக் கட்சியைச் சேர்வதாக வாக்களித்து, கையெழுத்துங் கொடுத்தாலன்றி நான் தேர்தலில் அவருக்கு உதவிசெய்யமுடியாது. இதைச் சொல்லிவிடு!

ராஜீ:—இன்னும் அதே வீம்பா? கான்பகதூர் பட்டத்தை விட்டுவிடுவதா? எளிதில் வந்ததா அது?

தியா:—ஆம்! விடத்தான் வேண்டும்—தேசபந்து நாட்டுமணி, தேசத்தூண், நாட்டரண், என்ற பட்டங்களை அவருக்குச் சனங்கள் சூட்டவேண்டுமாயின்!

குஞ்:—அதோ, அம்மா குரலா அங்கே கேட்பது! (இடப்புறத்தில் மறைகிறாள்).

ராஜீ:—கலெக்டர் கோபித்துக்கொண்டால், பங்களாவைப் பறிமுதல் செய்துவிட்டால்?......குஞ்சு! எங்கே ஓடுகிறாய்?நான் வந்துவிட்டதற்காகவா (தொடர்ந்து இடப்புறம் மறைகிறாள்).

சுப:—அடியம்மா—இந்தச் சிறுபெண்ணுக்கு இவ்வளவு உலக அறிவு? (வியந்து, மோவாயைக் கையால் தாங்க).

தியா:—(சிரித்துக்கொண்டு) இக்காலத்துப் பெண்களும் சிறுவர்களும் முன்னைபரினும்... ஆனால், இவர்-துலுக்கர் சொல்லிக்கொடுப்பதெல்லாம், பொம்மைக் கொலுவாலல்ல! பல்லக்கு, மோட்டார், குதிரை, யானை இவைகளைக் குழந்தைகளுக்குக் கற்பிக்க,நேரே செல்வதல்லாமல்,சிறு பொம்மைகளை வாங்கிக்குவித்து அடுக்கும் பழக்கமோ வழக்கமோ இல்லை!

சுப:—இவர்களா? முட்டாக்கும் முடுக்குமாய், திரைமறைவில் உள்ள முசல்மன் மாதரா? நன்றாய்ச் சொன்னீர்களே!

தியா:—(திடுக்கிட்டுச் சிரித்து) ஆம்! நான் பேசினது பிழை! இந்தப் பெண்ணின், கால்சிறுமையும், கால் வண்டியையும் கண்டு, முசல்மன் மாதரே இந்து மாதரினும், முன்னேறியுள்ளார் என்று எண்ணினேன். ஆம் முசல்மன் பெண்களுக்கு உள்ள சொத்து உரிமை முதலியன நம்சட்டங்கள் இந்திய மாதருக்குத்தருகின்றனவா? யானையும் பல்லக்கும் பார்த்தே இருப்பர் நம் பெண்மணிகள்—ஆனால் பொம்மையும் எதற்கு? பொம்மை மோகமேன்! பொம்மை வாழ்வே! உயிரியக்கும் மெய்வாழ்வுக்கு அஞ்சி ஓடுவார். கலியாணங்களேனும் பொம்மைக் கலியாணங்களே என்று நீயாகிலும் ஒப்புவா யல்லவோ?

சுப:—ஆம் உங்களுக்குத் துலுக்கமோகம் அதிகமாய் விட்டதால், நம்மைக் குறைகூறுகிறீர்.

திய:—எனக்கு என்னமோகம்—துலுக்க மோகமா (சிரிக்கிறான்)

சுப:—பின் ஏன் நம்மை வையவேண்டும்—ஆனால் நீங்கள் ஏசியபடி கலியாண விஷயங்களில் நாம் ...நம்மவர்...

தியா—நம்மவர்? (சிரிக்கிறான்)

சுப:—நீங்களே இப்போது ஒன்று ஓங்கி யடித்தீர்களே—நானும் ஏன்...

தியா:—நீயும், என்ன? வாய்திறந்து சொல்லக் கூடாதா...அத்தகைய மணத்திற்கு ஒவ்வேன் என்ற பிடிவாதத்தால், தாய் தந்தையரைத் தடுத்து நீ...

சுப:—குஞ்சு எங்கேயோ போய்விட்டாளே!

[சிரித்துக் கொண்டே இடப்புறத்தில் மறைய]

தியா:—நாம் என்று சொல்ல வந்தவள், நாணத்தால் நம்மவர் என்று சாதுரியமாய் மாற்றிவிட்டாள். அந்தக் கிழவி என்ன வைதாலும் நான் இந்த இடத்தை விட்டு நகருவதில்லை. குஞ்சு, சுபத்திரை இருவரிருக்க, நான் அகல்வதா? போகேன்! போகேன்!

நெற்குன்றவாணர்.

உலகம் யாவையு மீன்றவளாகிய உமாதேவியின் உழுவலன்பிற்கு உடல்குழைந்து, அவள் வேண்ட இருநாழி நெல்உதவி முப்பானிரு வறங்களும் தழைத்தோங்க, அருள்புரிந்த ஏகப்பநாதன் வீற்றிருக்கும் கச்சிநகரிலே, குன்றனைய தோள்கள்படைத்த தொண்டைமான் அரசு நடாத்துகையில், வேளாளர் மரபில் நெற்குன்றவாணர் என்ற பெரியா ரொருவரிருந்தனர்.

அவர், அன்பு அடக்கம் பொறுமை கல்வி கடவுள்வழிபாடு முதலிய தன்மைகளில் தலைசிறந்தவராய்த் திகழ்ந்ததோடு "அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவதெவன்" என்ற பொய்யாமொழியையும் நன்கு போற்றியவராய், வாசுகி யம்மையே போன்று "அன்னை தயையும் அடியாள்பணியும், பொன்னினழகும் புவிப்பொறையும், அன்னநடை வேசிதுயிலும் விறல் மந்திரிமதியும்" உடைய ஓர் பாவை நல்லாளைத் திருமணம்முடித்துத் "தென்புலத்தார் தெய்வம் விருந் தொக்கல் தான் என்றாங்கு ஐம்புலத்தா றோம்பல் தலை" என்ற இல்வாழ்க்கைக் கடன்களையும் செவ்வனே யாற்றி வருவராயினர்.

இவர் இவ்வாறாக, திருமகள் தோன்று மாழியிலேயே பெரியம்மையாரும் உடன் தோன்றினற்போன்று இவரது குலத்திற்றானே, நெறியல்லாவற்றை நெறியெனவும் கடவுள்வழிபாட்டை விளையாட்டென

வும் மதித்தொழுகும் கயவ னொருவன் தோன்றியிருந்தான். அவன் 'ஞானமுங் கல்வியும் நவின்ற நூற்களும், ஈனர்க்குறைத்திடில் இடராதாகும்" என்ற சொல்லை மெய்ப்பித்துக் காண்பிப்பான் போன்று ஒரு சிறிய வழக்கில், வாணரை இலைதைக்கும் இழிதொழி லியற்ற வைப்பதாய் ஆணையிட்டுக்கொண்டான்.

அக்கொடியோன் அவ்வாறு உரைத்திருப்பதையும் பொருட்படுத்தாது, வாணர் வழக்கம்போல் ஈகை வினைத் துறைநின்று, அரையனுக்குரிய ஆறில் ஒரு பகுதியையும் அவ்வறப்பகுதிகட்கே உதவியும் வந்தார். செவிக்கினிய மெல்லோசை நனிமிகுந்ததும் இயற்கைவளர்செறிவுடையதும், மற்றுள்ள எல்லா இனிமைகளையும் தனக்கே உரித்தாகியதுமான தமிழ்மொழியில் புலமைவாய்ந்துள்ள தம் இன்னுயிர்க் காதலியுடன் வாணர் பல அரிய பொருள்களைப்பற்றி உரையாடுவதிலேயே பொழுதுபோக்கினமையால், அவரது வேளாண்மைத் தொழிலை மேற்பார்வையிடுவாரின்றி விளைவுகுன்ற அவருக்கு வறுமைமேலிட்டது,

"செவிக்குண வில்லாத போது சிறிதுவயிற்
[றுக்கு மீயப்படும்'
"செவிச் செல்வம் செல்வத்து ளெல்லாம் தலை"

என்று ஆன்றோர் கூறியவாறு கல்வியில் மேம்பட்ட துணைவியாருடன் அளவளாவுதலே பெரும் செல்வமென வாணர்கொண்டமையின் பொருட்குறை வென்னும் வறுமை அவரை என்செய்ய வல்லது. ஆயினும் அப்பர் சீகாழிப்பிள்ளையார் முதலிய சமய குரவர்கள் வறுமையினால் துன்புற்றிலரேனும், தம்மைச் சூழ்ந்துவரும் அடியார் கூட்டங்கள் வருந்தாதிருக்க, வீழிமிழலையானிடம் படிக்காசு பெற்றமைபோல, வாணரும் தன்னையடைந்த ஒரு பாவலன் பொருட்டுச் சிறிது பொருள்வேண்டிப் பெரிதும் இடுக்கணெய்தினர். எவ்வாற்றாலும் கிடைத்ிலது. வாணரோ.

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கால் உலகூட்டும்-ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ராலும்
இல்லையென மாட்டார் இசைந்து.

என்ற இயல்பினராகையாலும் வேறொருவரும் தம்மை விலக்குவாரும் கொள்வாரு மின்மையாலும் தன்மீது முன்பு வஞ்சினமுரைத்த செல்வவானிடம் விலைப்பட்டுப் பொருள்வாங்கிப் புலவனுக்கு உதவினர்.

தலைகொடுத்த குமணனிலு முயிர்கொடுத்த
நந்தியினுந் தமிழ்க்காத் தான்போய்
விலைபடுமிந் நெற்குன்ற வாணனையே
லெனத்துணிந்து விளம்பலாகி
நிலைபொறுத்த புலமையுற்று மானத்தும்
புகழ்பெரிதா நினைத்ததாலும்
கலையுணர்ச்சி சிறிதறினு மினத்தோடிகல்
கொடுங்குணமுங் கடந்தானம்மா.

(புலவர்புராணம் பக்கம் 324.)

விலைக்குக் கொண்டவனோ முன்புபேசிய தன் ஆணை நிறைவடைய அவரை இலைதைக்கச் செய்தான்.

வாணர் தமது நிலையை மனைவியாருக்கு ஓர் பாவில் வரைந்து விடுத்தார். அறிந்த அவ் அணங்குபோன்றார் "உற்றவிடத் துயிர்வழங்கும் பண்பினராதலால்" பற்றலருக்குப் பணியச்செய்த திருவருளை நினைந்து யாவதனினும் பெரும்துயரத்தைத் தங்களுக்குக் கொடுத்தது முறையன்றென முறையிட்டுச் சொல்லவொண்ணாத் துன்புற்றார். அப்பொழுது காவலனது தூதுவர் சிலர் வாணரைக் குறுகி மன்னனுக்குரிய திறை முழுமையும் கொடுக்கவேண்டும், இன்றேல் அவன் முன் வரவேண்டுமென்று வேண்ட அவர், விலைகொண்டான் பணித்தவாறெழுதுவதாய்ச் சொல்ல அத்தீயோன் வேந்தன்பால் சொல்லவிடுதலும், அவர் சேவகருடன் இல்லம் சென்று மாண்புடை மனைவியரால் அறுசுவையடிசில் ஊட்டப்பட்டுத் தொடர்ந்து வந்தோரும்உண்டு களித்தபின் பிரியா விடைகொண்டு போந்தனர். வாணரது திருநீற்றினொளியும் கண்டியின் (உருத்திராக்கம்) களனும் அரையனது சினத்தை ஒழித்தனவாயினும் மன்னன் ஆணையினிமித்தம் முனிவுடையான் போன்று அவரைநோக்கித் திறைப் பகுதி எல்லாம் கொடாவிடின் துன்புறத்துவதாய் அச்சுறுத்தினன். வாணரோ வணக்கமிக்கவராய் "வளவ, நின்பொருளை அறவழியிலேயே செலவிட்டுள்ளேன். அல்லாது யான்வஞ்சித்துக் கவர்ந்து கொள்ளவில்லை; இதற்குச் சிவபெருமானே சான்றாவான். என்னை எது செய்யினும் செய்க" என்றனர். கேட்ட தொண்டைமான் ஏவலரை விளித்து இவரைத் தன் னாட்டின்புறத்தே விட்டுவருமாறு பணித்துப் பின் அவரை நோக்கித் திறைமுழுமையும் கொண்டுவரும் நாளல்லது தன்நாட்டிடை வருதலாகாதெனக் கட்டளையிட்டான். இவ்விவகாரத்தை நாயகிக்கு ஓர் செய்யுளில் யாத்துவிடுத்தபின் வாணர் சோழநாடடைந்தார்.

ஆங்கு, கண்டு கைதொழுவாருக்குக் கருதற்கரிய கண்ணுதலான் கழல் நல்கும் பெரும்பற்றப்புலியூர் திருப்பாப்புலியூர் முதலிய சிவபெருமான் பதிகள் பலவும் தொழுது, ஆண்டவரசுகள் சிவானந்த வடிவாகிச் சிவத்திலிரண்டறக் கலந்தும், பரவையார் கேள்வருக்கு மட்பலகை (செங்கல்) பசும்பொன் பலகை ஆனதுமான திருப்பூம்புகலூரில் வேழமுகத் தோன்முன் வாணர் ஓர் பாவைப் பாடக்கேட்ட அவ்வாலயத் தொண்டு செய்யும் பெண் அவரை நெருங்கி அக்கவியை காப்பாகவைத்து ஓர் அந்தாதி பாட வேண்டுமென இறைஞ்சினாள். அவர் அந்தாதி பாடுவதாயின் தாம் தொண்டைமானுக்குச் செலுத்தவேண்டும் பொருள் தொகுதி எல்லாம் அவளால் கொடுக்க இயலுமா என்று கேட்டார்.

188924

அவர், விழைவனவெல்லாம் கொடுப்பதாய்மொழிய வாணர் பூம்புகலூர் இறைவன்மேல் இணையில்லா அந்தாதி ஒன்று பாடிமுடித்தனர். விருப்பம் செவ்வனே முற்றுப்பெற்றதும் அம்மாது வாக்களித்த அளவேயன்றி இருமடங்கு செல்வமளித்துப் பின்னும் வேண்டும் சிறப்புக்களும் உதவி வாணரை வணங்கினாள்.

வாணர், பெற்றசிறப்புக்களுடனும்செல்வக்குவியல்களுடனும் வேந்தனையணுகி அவனது கடமையைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுதலும் அம்மன்னன் பொருள் வந்த ஆற்றைக் கேட்டறிந்து தன்னுள் வெட்கி அவருக்கே யவ்வளவும் நன்கொடையாக்கி விட்டதாய் மொழிந்தான். பின்னர்க் காவலனது விடைபெற்றுத் தம் மிருப்பிடஞ்சென்று திருவருளை நினைத்துக்கொண்டு முன்புபோலவே, அன்பு ஈகை முதலிய செவ்விய வழிகளைக் கடைப்பிடித்து, இல்லாளுடனும் பிற சுற்றங்களுடனும் களிப்பெய்தி வாழ்ந்து

வருகையில் முன்பு இவரை இலைதைக்க விடுத்தவன் பொருள்வருவாய் ஒன்று மின்றி மிக்க இடுக்கணடைவதைக் கேட்டு,

"என்று முகமணியம்பாதவர்கண்ணும்
சென்றுபொருள் கொடுப்பர் தீதற்றோர்"
"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்துவிடல்"

என்ற பெரியோர் கூற்றின்படி வாணர் தாமே அவனிடம் சென்று வேண்டும் உதவிகள் புரிந்து அவனது தொன்மைநிலையில் வாழச் செய்தனர்.

பொற்புறுசெல் வமும்படியு மாறிடற்கு
மரசனுளிற் பொங்குங் கோப
மற்புருவா யினுமாயிடு மென்றிடற்கு
நன்மனையா ளாக்கத்திற்கு
நற்புருடர் பண்பினுக்கு மேனைக்கும்
பத்தரெவ னாலேவுற் றாலும்
பிற்புறசெய் திடுதற்கு மிக்கதையோர்
சான்றாகும் பேசுங் காலே.
ஆணுருவா யுயர்குலத்திற் பிறந்துபெருஞ்
செல்வமது பலித்திட்டாலுஞ்
சேணுநில மும்புகழும் பெருஞ்சீர்த்தி
விளையாமற் செத்தா ராயின்
மாணுயிர்தென் புகலூரான் திருவடிக்கோர்
தமிழ்மாலை வாங்கிச்சூட்டி
நாணுமட முந்தவிர்த்து வாழ்ந்தமக
ளினுந்தாழ்வா கிவிட லாமே.

(புலவர் புராணம்)

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[493-வது பக்கத் தொடர்ச்சி]

(புலன்கள் - Perception)

இடவுணர்வு.

நமது உடலில் ஒரு புறத்தில் இரண்டிடங்கள் தொடப்படின் இரண்டிடத்தையும் உணர்கின்றோம் அன்றோ! இங்கு, இடவுணர்வு எவ்வாறு எழுகிறது; அவற்றின் இருப்பிடத்தை எவ்வாறு உணர்கின்றோம்? கிளர்ச்சியுற்ற இடநிலை இரண்டென்பதையும் நாம் உணர்தல் வேண்டும்; இடையே கிளர்ச்சியுறாத இடப்பரப்பையும் நாம் உணர்தல் வேண்டும் இடைநின்ற இடப்பரப்பை யுணராது கிளர்ச்சியின் இருமையை மட்டும் உணர்வோமாஞல் இடவுணர்வு எழுவது இல்லை. ஒரே இடத்தினின்றும் இரு வேறு ஒலிகள் எழலாம் அன்றோ? ஒரே குடிநீரில், இனிமையையும் புளிப்பையும் உணர்கின்றோம் அன்றோ? சூட்டுணர்வும் குளிர்ச்சியுணர்வும் ஒரே இடத்தில் எழலாம் அன்றோ? ஆதலின், கிளர்ச்சி இரண்டாக எழுவதனாலேயே இடவுணர்வு எழுவது இல்லை. இடையே நின்ற இடப்பரப்பின் உணர்வும் உடன் எழுதல் வேண்டும்.

ஒவ்வொரு புலனிலும், இடவகையால் வேறுபடும் உணர்ச்சியை உணர்கின்றோம். மூக்கைத் தொட்டுப்பின் உள்ளங்கையைத் தொட்டபோது, இரு வேறு உணர்ச்சிகள் எழுகின்றன. அவ் வேறுபாட்டால் ஒன்று மூக்கினின்று எழுந்தது; மற்றொன்று உள்ளங்கையினின்று எழுந்தது எனப் பேசுகின்றோம். உள்ளங்கை, புறங்கை, என்ற இவற்றையோ மார்பு, முதுகு, என்ற இவற்றையோ; அல்லது உடலின் வேறு இரண்டு நிலைகளையோ ஒன்றின்பின் ஒன்றாகத் தொட்டுப் பார்ப்போமானல், நம் ஊற்றுணர்வு, அவ்வுறுப்புக்களின் இருப்பிடத்திற்குத் தக்கவாறு வெவ்வேறு உணர்ச்சியோடு எழுதலைக் காண்கிறோம். புறங்கையையே, வலக்கையிலும், இடக்கையிலும் தொட்டுப் பார்க்கும்போது, வெவ்வேறு உணர்ச்சிகள் எழுகின்றன. மிக்க அருகில் உள்ள உறுப்புக்களைத் தொட்டுப்பார்க்கும்போதும் இவ்வுணர்ச்சி வேற்றுமை புலனாகின்றது வலக்கையில் உள்ள சுட்டுவிரலின் மூட்டுவாயையும் நடுவிரலின் மூட்டுவாயையும் ஒரேயளவாகத் தொடும்போது இடத்திற்குத் தக்கபடி வெவ்வேறு உணர்ச்சிகள் எழுகின்றன அன்றோ? வெவ்வேறு இடங்களில் இவ்வுறுப்புக்கள் இருக்கின்றன என நாம் முன்னரே உணர்ந்திருப்பதால், நமது மனம் அதற்குத் தகப் படைத்துக் கொள்ளும் உணர்ச்சிகளே இவை எனச் சிலர் நினைக்கலாம். இடம்என்ற உணர்வையே மறந்துவிட்டபோதும், இவ்வேற்றுமையை ஆராய்ச்சிவாணர் பலர் உணர்கின்றனர். இவ்வாறே இரைப்பை வலி, குடர் வலியிலும் வேறாகத்தோன்றுகிறது. ஒற்றைத் தலைநோய், இரட்டைத் தலைநோய் முதலிய வேற்றுமையனைத்தையும் நாம் உணர்கின்றோம் அன்றோ!

இவ்வுணர்ச்சியைப் புலன்களின் இயற்கையான இடப்பண்பு எனக் கூறிவிடலாமா? இடப்பண்பே இடவுணர்வை எழுப்புகின்றது என்போமா? அங்ஙனம் கூறின் ஒவ்வொரு இடநிலையிலும், இடவுணர்வு எழுகின்றது என்றன்றோ முடியும்? ஆனல், தனி இடநிலை இருந்தால் இடவுணர்வு எழுவதில்லை என்றும், இரண்டு வேறு இடநிலைகளை யுணர்ந்தால்தான் இடவுணர்வு எழுகின்றது என்றும் முன்னரே கூறியுள்ளோம் அன்றோ! ஒரு தொடுமிடம், தனது பண்பால் தனதிருப்பிடவுணர்வை உண்டாக்குவதில்லை; மற்றொரு தொடுமிடத்தின் தொடர்பால்தான் அவ்விட வுணர்வை எழுப்புகின்றது. மற்றொரு தொடுமிடம் இல்லையானல், நம்மைப்பொறுத்தவரையில் அதற்கு இருப்பிடமே இல்லையாம். ஆதலினல், வேற்றுமை யுணர்ச்சியைஇடப்பண்பு எனக்கூறுவதற்கில்லை. ஒரு புள்ளி பரப்பாவது எங்ஙனம்?

எனினும், தொடும் உணர்ச்சி இடத்திற்குத்தக்கவாறு வேறுபடவும் காண்கின்றோமே! அவ்வுணர்ச்சிகள் இடவுணர்வு எழுவதற்கு நிலைக்களனாகவும் விளங்குகின்றன. இவற்றை இடக்குறி எனலாம். இவற்றிற்கும் இடநிலைக்கும் இயற்கைத் தொடர்பொன்றும் இல்லை. ஆனல் இடநிலையை நாம் உணர்வதற்கு அறிகுறியாக இவை விளங்குகின்றன. ஒரு

வீட்டின் கதவில் எழுதப்பட்டிருக்கும் எண்ணிற்கும் அவ்வீட்டிற்கும் உள்ள இயற்கைத்தொடர்பு யாதொன்றும் இல்லை. எனினும், அந்த எண்ணை மனதில் வைத்துத்தான், அவ்வீட்டை அத்தெருவில் எளிதாகப் பிரித்து உணர்கின்றோம். அந்த எண் அவ்வீட்டை அறிய ஓர் அறிகுறி யாதல்போல, இடவேற்றுமை யுணர்ச்சியும், இடத்தோடு இயற்கைத் தொடர்புகொண்டு விளங்காமற்போனலும், அவ்விடநிலையை நாம் அறிவதற்கு ஓர் அறிகுறி ஆகின்றது.

இவ்வுணர்ச்சியைக் குறி என்போமானல், அதனல் குறிக்கப்படும் இடநிலையை வேறொரு வழியால் நாம் முன்னரே இயற்கையாலோ செயற்கையாலோ அறிந்திருத்தல் வேண்டும். ஒரு தொடுமிடத்தின் இருப்பிடம் அதனோடு தொடர்புண்ட மற்றொரு தொடுமிடத்தால்தான் வெளியாகின்றது எனக் கண்டோம். ஆகவே இடக்குறியானது இவ்விரு தொடுமிடங்களையும்சுட்டுதல் வேண்டும். நரம்புகளின் பழக்கமுறையை ஆராயும்போது, நரம்புகளில் இரண்டு வேறு நிலைகள் ஒரேபோதில் கிளர்ச்சியுற்றால், அவ்விரண்டு நிலைகளும் இணைக்கப்படுகின்றன என்றும், பின்னர் ஒருபோது அவற்றின் யாதேனும் ஒரு நிலையிடம் கிளர்ச்சியுற்றால் அக்கிளர்ச்சி மற்றைய நிலையிலும் சென்றுபாய்கின்றதென்றும் கண்டோம். அவ்வாறே இரு தொடுமிடங்களும் ஒருமுறை கிளர்ச்சியுற்ற இணைந்து கிடந்தால், பின்னர் அவற்றில் ஒரு தொடுமிடம் கிளர்ச்சியுற்றதால் எழும் உணர்ச்சி, மற்றொரு தொடுமிடத்தையும் குறிக்கின்றது. ஆகவே உடலின்கண் உள்ள ஒவ்வொரு புள்ளியிடமும் அதைச் சுற்றியுள்ள இடங்களோடு இணைந்து விளங்குகின்றது. அருகில் இவ்விணைப்புறவானது மிக்கும், தொலைவிற் செல்லச்செல்லக் குறைந்தும் போகின்றது. ஒவ்வொரு புள்ளியைச் சுற்றிலும் நமது உடலில், ஒவ்வோர் இணைப்புறவு வட்டம் திகழ்கின்றது. இரண்டு வேறு இடங்கள் தொடப்பட்டபோது, இவ்விரண்டு இடங்களைச் சுற்றிலும் உள்ள இருவேறு இணைப்புறவு வட்டங்கள் கிளர்ச்சியுறுகின்றன. இவ்விரண்டு வட்டங்களும் குளத்தில் எழும் சுற்றலைகள் போலப் பரந்துவரும்போது ஒன்றோடொன்று சேருமன்றோ? அவ்வாறு சேர்ந்த இடமே, இடப்பரப்பாக விளங்குவது. இவ்வாறு இரண்டும் சேர்ந்த இடம் ஒரே நேர்க்கோடாக விளங்குகின்றது. இடக்குறிகளுடன் வேறுபாட்டால்இரண்டு வேறுதொடுமிடங்களின் உண்மை வெளியாகின்றது. பழக்கமுறையின்படி இடைநின்ற இடப்பரப்பின் உண்மை வெளியாகிறது.

ஒரே ஒரு தொடுமிடமட்டும் கிளர்ச்சியுற்றபோது இடவுணர்வு எங்ஙனம் எழுகிறது? ஒருதொடுமிடத்தைத் தொட்டபோதும் அதைச் சுற்றியுள்ள இணைப்புறவு வட்டமுழுதும் கிளர்ச்சியுறுகின்ற தன்றோ? அவ்விடக்குறி அம்முழு இடப்பரப்பையும் சுட்டுகின்றது. இந்தத் தொடும் இடம் விரல்களுக்கு அருகாமையில் இருந்தால் மற்றொன்றும் நிகழ்கின்றது. கால் அல்லது கைவிரல் நுனிகள் புலனுட்ப முடையன அன்றோ? அவற்றிற்கருகில் ஒரு பொருள் வருமானல், இதனை விரல்களுக்கு நேரே கொண்டுவந்து தொட்டுப் பார்ப்பது வழக்கமாய் விட்டது. விரல் நுனிகளுக்கும், அதைச்சுற்றியுள்ள இடங்களுக்கும் இவ்வாறு தொடர்புணர்வதால், ஒவ்வோர் விரல் நுனியைச் சுற்றிலும் ஒவ்வோர் இணைப்புறவு வட்டம் எழுகின்றது. இதனல், எனது கையில் எந்தப் புறத்தைத் தொட்டாலும், தொட்ட இடத்திற்கும் விரல்நுனிக்கும் உள்ள தொடர்பு நினைவிற்கு வருகிறது.

இவ்வாறே கண்களிலும் இணைப்புறவு வட்டம் எழக் காண்கிறோம். நமது கண்கள் ஒவ்வொன்றிலும் குருட்டிடமும், ஒளியிடமும் இருப்பதனைக் கண்டோம். மஞ்சளாக விளங்கும் ஒளியிடத்திற்கு நேரே இருந்தால்தான் பொருள்கள் நன்கு விளங்குகின்றன என்பதையும் குறித்துவைத்தோம். ஒரு பொருளின் ஒளி கண்ணில் விழுமானல், அப்பொருட்கு நேரே அவ்வொளியிடம் நிற்குமாறு, கண்ணனது தானே திரும்புகின்றது. கண்ணில் உள்ள ஒவ்வொரு புள்ளியும் அவ்வொளியிடத்தோடு இவ்வாறு திரும்பும்போது, இயைபு பெறுகின்றன. ஆகையால் அப்புள்ளிகளில் எழும் இடக்குறி, ஒவ்வொன்றும், அவ்வொளி இடத்தோடு உள்ள இயைபையும் விளக்குகின்றது. "இடக்குறி தோன்றுமிடத்திற்கு அவ்வொளியிடம், வலமாக இருக்கிறதா, இடமாக இருக்கிறதா மேலாக இருக்கிறதா, கீழாக இருக்கிறதா, எவ்வளவு தொலைவில் இருக்கிறது?" என்பன எல்லாம் விளங்குகின்றன. தொடுமிடங்கள் தொடர்ச்சியாகத் தொடர்புபெற்று ஒரு நேர்க்கோடாகின்றன. காலவுணர்வை ஆராய்ந்த நாம், இவை முறையே ஒன்றின்பின்னென்றாகத் தலைதடுமாறாது ஒன்றுபட்டு நேர்க்கோடாய் விளங்குவதை எளிதில் உணரலாம்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,

நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
நேத்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவாம்ருதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (2-0-0) பிரான்சு:

டிப்போ, பம்பாய் கல்கத்தா.

NANJANGUD TOOTH POWDER

மதுரை காஞ்சீபுரம்.

யாப்பிலக்கணம்

உறுப்பியல் சுருக்கம்.

[490-வது பக்கத் தொடர்ச்சி]

இதுவரையில்,யாப்பிலக்கணத்தில் உறுப்பியலைமுடித்தோம். இனிச் செய்யுளியலைத் தொடங்குமுன், அவைகளை நினைவிற்கொள்வது நலமெனக்கருதிப் பின்னுமோர்முறை இங்குச் சுருக்கமாக வரைந்து காட்டுகின்றோம்.

செய்யுள்களுக்கு இன்றியமையாத உறுப்புக்கள் ஆறு :-எழுத்து, அசை, சீர், தளை,அடி, தொடை.

எழுத்துக்களால் அசைகள் ஆகும் :—அவ்வெழுத்துக்கள்—உயிர், மெய், உயிர்மெய், குறில், நெடில், குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து, என்பனவாம்.

அசைகள் இருவகைப்படும் :—நேர், நிரை. தனிக் குறிலேனும் தனி நெடிலேனும், மெய்யெழுத்துடன் சேர்ந்தேனும் சேராமலும் நிற்பன நேரசைகள் :—ப, பா, பல், பால், நேர்ந், துய்த்.

இரண்டு குறில்களேனும், குறிலும் நெடிலுமேனும், மெய்யெழுத்துக்களை அடுத்தேனும் அடுக்காமலேனும், நிற்பன நிரையசைகள் :—கலு, கலுழ், கலுழ்ந் ; கலா, கலாம்.

குறிப்பு :—ஒரு நேரசைக்குப்பின் குற்றியலுகரம் நிற்குமாயின், அதனை நேர்பசையென்றும், ஒரு நிரையசைக்குப் பின் குற்றியலுகரம் நிற்குமாயின் அதனை நிரைபசை யென்றுங் கூறுவதுமுண்டு: — முற்றுகர ஈறாயினும் நிரைபசையேயாம்.

காது, கண்டு, ஊர்ந்து,—நேர்பசை.

அழுது, புரண்டு, நகர்ந்து, கதவு—நிரைபசை.

அசைகளால் ஆவனசீர் :—அவை,அசைச்சீர்,இயற்சீர், உரிச்சீர், பொதுச்சீர், என நால்வகைப்படும்:—

1. அசைச்சீர்:—ஓரசையே சீராவது. (இதனைப் பொதுச்சீரென்று அழைப்பதும் உண்டு)
2. இயற்சீர்:—இரண்டு அசைகள் சேர்ந்து ஆவது. தேமா, புளிமா, கருவிளம், கூவிளம்:— இதற்கு ஆசிரிய உரிச்சீர் என்ற பெயரும் உண்டு.
3. உரிச்சீர்:—மூன்று அசைகள் சேர்ந்து ஆவது:- வெண்பாவுரிச்சீர்: —தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய்— (காய்ச்சீர் அல்லது வெண்சீர்)
   வஞ்சியுரிச்சீர்: — தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி – (கனிச்சீர் அல்லது வஞ்சிச்சீர்.)
4. பொதுச்சீர்: —நான்கு அசைகளால் ஆவது.
   சீரோடு சீர் சேர்வது தளையெனப்படும்:—அது, ஆசிரியத்தளை, வெண்டளை, கலித்தளை, வஞ்சித்தளை என நால்வகைப்படும்.

நிலைச்சீர் இயற்சீராயிருக்க, அதனீற்றசை வருஞ்சீர் முதலசையோடு ஒன்றியிருத்தல் ஆசிரியத்தளை.

தேமா + கூவிளம், தேமா + கூவிளங்காய்,புளிமா + தேமாங்காய், முதலியன நேரொன்றிய ஆசிரியத்தளை.

கருவிளம் + புளிமா, கூவிளம் + கருவிளங்காய், முதலியன நிரையொன்றிய ஆசிரியத்தளை.

வெண்டளை:—இயற்சீர் விகற்பமும் வெண்சீர் ஒன்றலும், வெண்டளை.

புளிமா + கருவிளம், தேமா + புளிமாங்காய், கருவிளம் + தேமா, முதலியன இயற்சீர் வெண்டளை.

புளிமாங்காய் + தேமா; கருவிளங்காய் + கூவிளம், தேமாங்காய் + கூவிளங்காய், முதலியன வெண்சீர் வெண்டளை.

கலித்தளை:—காய்ச்சீரின் பின் நிரையசை வருதல்:—தேமாங்காய் + கருவிளம்—புளிமா— புளிமாங்காய்—கருவிளங்கனி, முதலியன.

வஞ்சித்தளை :—நிலைச்சீர் கனிச்சீராக, வருஞ்சீரின் முதலசை எதுவேனுமாதல்.

புளிமாங்கனி + புளிமா — கருவிளம்—கருவிளங்கனி—புளிமாங்காய் முதலியன, ஒன்றிய வஞ்சித்தளை.

கருவிளங்கனி + தேமா — கூவிளம்—தேமாங்காய் —கூவிளங்கனி, முதலியன ஒன்றாத வஞ்சித்தளை.

அடி :—இரண்டு முதலிய சீர்களைக் கொண்டு முடிவது அடியாகும்.

குறளடி—இரண்டு சீர்.
சிந்தடி—மூன்று சீர்.
அளவடி—நான்கு சீர்.
நெடிலடி—ஐந்து சீர்.
கழிநெடிலடி—ஐந்திற்கு மேற்பட்ட சீர்கள்.

தொடை :—பல சீர்களின் சொல்லேனும் எழுத்தேனும் அழகுறத் தொடுப்பது தொடை. தொடைகள்—மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை, என ஐந்து.

முதற்சீரின் முதலெழுத்தோடு மற்றோர்சீரின் முதலெழுத்து ஒன்றியிருத்தல் மோனைத் தொடை. இவ்வாறேஇரண்டாமெழுத்து ஒன்றியிருப்பின் எதுகைத் தொடை. முதற்சீரின் சொல்லோடு, மற்றச் சீரின் சொல் முரணி நிற்றல் முரண்தொடை. ஈற்றுச் சீரின் ஈற்றெழுத்தேனும்,அல்லது அவ்வீற்றுச் சீராயமைந்த சொல்லேனும் மற்றச் சீர்களின் ஈற்றெழுத்து அல்லது சொல்லோடு ஒன்றியிருத்தல் இயைபுத்தொடை. முதற்சீரின் எழுத்து ஒன்று அளபெடுத்திருக்க, மற்றச்சீரிலும் அளபெடுத்தொன்றுதல் அளபெடைத் தொடை.

இத்தொடைகள் அமைந்திருக்கும் இடம்பற்றி, அடி,இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை,மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று, என ஒவ்வொன்றும் எட்டு வகைப்படும்.

ஒரு அடியிலுள்ள சீரிற்கும் வேறோர் அடியிலுள்ள சீரிற்கும் அமையுந் தொடை அடி எனப்படும். மற்றவை ஓரடியின்கண் உள்ள சீர்களிலேயே அமைவன.

1 2 0 0	இணை.
1 0 3 0	பொழிப்பு

1—2—3—0	கூழை
1—0—0—4	ஒரூஉ
1—0—3—4	மேற்கதுவாய்
1—2—0—4	கீழ்க்கதுவாய்
1—2—3—4	முற்று

குறிப்பு :—தொடைவிகற்பங் காணுங்கால், இயைபுத் தொடைக்குமாத்திரம் ஈற்றுச்சீரை முதற்சீர்போல் பாவித்து எண்ணல் வேண்டும்.

இவைதவிர, விகற்பங்கள் ஏற்காத்தொடைகள், இரட்டை, அந்தாதி, செந்தொடை, என மூன்று. ஓரடியின்கண் ஒரு சீரிலே வந்த சொல்லே எல்லாச் சீர்களிலும் ஒன்றிவருதல் இரட்டைத்தொடை. ஓர் அரடியின் இறுதிச்சீர், அல்லது அசை, மற்ற அடியின்முதல்ஆவது அந்தாதித்தொடை.தொடையாதும் எய்தாவிடத்தும், இசையின்பம் குறையாமல் நடப்பது செந்தொடை.

இயைபுத்தொடைக்கு இறுதிச்சீரும், மற்றத் தொடைகளுக்கு முதற்சீரும், அத்தொடைகளுக்குரிய சீர்களில் ஒன்றுப் இருக்கவேண்டியது இன்றியமையாதெனக் கூறினோம். வேறொருசாரார் கடைச்சீர் இடைச்சீர்களைத் தொடர்ந்தும் சில விகற்பங்கள் கூறுவார். அவைகளைப்பற்றி இங்கு விரித்துறைக்க வேண்டுவதில்லை. எனினும் அவைகளின் பெபரையும் அமைப்பையும் மாத்திரம் சிறிது குறிக்கலாம்.

i. கடையடி மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை, முதலியன :—ஓரடியின் ஈற்றுச் சீரிற்கும் மற்றோரடியின் ஈற்றுச் சீரிற்கும், அமைவது.
ii. கடையிணை மோனை, எதுகை முதலியன:—அடியின் கடையிருசீறிலும் அமைவது:—0-0-3-4.
iii. பின்மோனை, எதுகை, முதலியன: — அடியின் இரண்டாஞ் சீரிற்கும் நான்காஞ் சீரிற்கும் அமைவது:—0-2-0-4.
iv. இடைப்புணர் மோனை, எதுகை முதலியன:— இரண்டாஞ் சீரிற்கும், மூன்றுஞ் சீரிற்கும் அமைவது :—0-2-3-0.
v. கடைக்கூழை மோனை, எதுகை முதலியன:— இரண்டாம் மூன்றும் நான்காம் சீர்களில் அமைவது:—0-2-3-4.

குறிப்பு :—ஒரு செய்யுளின்கண் பல தொடைகள் வரலாம். எனினும் முதல்முதல் வந்த தொடையின் பெயரால் அச்செய்யுளை வழங்கவேண்டு மென்பர்.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 4. நகர்நீங்கு படலம்.

[496-வது பக்கத் தொடர்ச்சி]

அச்சுதா ஞழ்ந்ததோ நினைவுதா னீண்டதோ!

பெருமைக் குரியவன் இராமனெனின், நம்முடைய அருமைக்குரியவன் இலக்குவன். அருளுடையோரை வணங்குவோம்; மற்று, அணைத்துத்தழுவி ஆரமகிழ்வது அன்புடையோரையே. அண்ணன் இராமன்பால் இத்தம்பி இலக்குவனுக்கிருந்த அன்பினதார்வத்திற்கு ஆழமேனும் அகலமேனும் அளவிட்டுக் காணலரிது. பரதன்தானும் இச்சகோதர அன்பில் எள்ளளவு குறைந்தவனலனேனும், மூத்தோனுக்குரிய முடியைத் தான் வௌவினனென்னும் பழிக்கும் ஒருபா லஞ்சி அதனை நஞ்சென நண்ணுதொழிந்தன னென்னும்படியும் நிகழ்ச்சிமுறை நிற்றலால், தன்பொருட்டு யாதும் தகையாத தூய்மையோடு திகழ்வது இலக்குவன்றன் அன்பின்திறம். அன்னவன், தந்தை தந்த அரசினை இராமனிடத்தினின்று வரத்தினாலே சிற்றன்னை தான் வாங்கிக்கொண்டு அவனுக்கு வனமளித்த வரலாற்றைக் கேட்டான்; கேட்டு, மூட்டாத காலக் கடைத்தீயென மூண்டெழுந்து, தன் ஆதிமூர்த்தியான அனந்தனேபோல் உண்ணிற்கு மூயிர்ப்பெனும் ஊதை பொங்க,

> சிங்கக் குருளைக் கிடுதீஞ்சுவை யூனை நாயின்
> வெங்கட் சிறுகுட்டனை யூட்ட விரும்பி னாளால்
> நங்கைக் கறிவின்றிற நன்றிதுநன்றி தென்னாக்
> னங்கைக் கிறைவன் கடகக்கை புடைத்து நக்கான்.

[சிங்கக் குட்டிக்குப் போட்ட இனிய சுவையுடைய மாமிசத்தை, விழைந்து நோக்கும் கண்களையுடைய சிறு நாய்க் குட்டிக்கு ஊட்ட நினைத்தாளே. இந்தக் கைகேசியின் அறிவு நன்று நன்று, என்று கடகமணிந்த தன் [illegible] கொட்டி, கங்கைக்குத் தலைவனான சிவபிரான் போன்ற இலக்குவன் (திரிபுரமழித்த காலத்தில் அச்சிவபிரான் சிரித்ததேபோல்) சிரித்தான்]

நகுதலோடு நின்றிலன். வாளை இடைவிசித்து, வில் தாங்கி, புட்டில் வீக்கி, கவசமேந்தி,தோள்களும் மார்பும் பொங்க, கடல் நாணத் தன் பொற்கழல்கள் ஆர்ப்ப, இடியெனத் தன் கார்முகத்தின் நாணொலி எழுப்பி வீதிவாய் வந்தெய்திச் சந்தியுஞ் சேர்ந்தனன். சேர்ந்து,

> புவிப்பாவை பரங்கெடப் போருவந்
> தோரை யெல்லாம்
> அவிப்பானு மின்றே யவித்தாக்கையை
> யண்ட முற்றக்
> குவிப்பானு மின்றே யெனகோவினைக்
> கொற்ற மௌலி
> கவிப்பானு நின்றே னிதுகாக்குநர்
> காமி னென்றான்

[என்னோடு போர்செய்ய விரும்புகின்றவர்களை யெல்லாம் பூமிதேவியின் பாரம் நீங்கும்படி இன்றே அழிப்பதற்கும், அழித்த உடல்களை ஆகாயத்தை எட்டும்படிகுவிப்பதற்கும், எனது தலைவனான இராமனுக்கு வெற்றியுடைய முடியை இன்றைக்கே சூட்டுதற்கும், இங்கு யான் நிற்கின்றேன்—இதனைத் தடுக்கவல்லவ ரிருப்பீராயின் தடுங்கள் பார்ப்போம்—என்றான்]

முகம்நண்ணி முட்டி குலக்குதற்கு அவ்வயின் இதவி[illegible]லர். முனைப்படாப் பகைவரையே [illegible]. தன் கோவினிற்குக்

கொற்ற மௌலி கவிப்பதொன்று மட்டுமே இவன் கருமமுமன்று. அதன்பின்னர், இத்தீங்கிழைத்த கைகேசியின் இனப்பழி கழிப்பதொரு கருத்து முடையனாய்,

விண்ணாட்டவர் மண்ணவர் விஞ்சையர்
நாகர் மற்று
மெண்ணாட்டவர் யாவரு நிற்கவொர்
மூவ ராகி
பண்ணாட்டுநர் காக்குநர் வீட்டுநர்
வந்த போதும்
பெண்ணாட்ட மொட்டே னினிப்பேருல
கத்து ளென்னா

[தேவர் மனிதர் வித்தியாதரர் நாகர், மற்றும் எண்ண வல்ல எவ்விடங்களில் இருப்பவர் யாவருங் கிடக்க, மூவர் ஆகி உலகத்தைப் படைக்கும் பிரம்மனும், காக்கும் திருமாலும், அழிக்கும் சிவனும் என்னை எதிர்த்து வந்தபோதும், இனி இந்தப் பெரிய உலகத்தின்கண் பெண்களின் ஆட்டம் செல்லவொட்டாமற் கெடுக்கின்றேன்...என்று]

நெடு வஞ்சினமும் நிகழ்த்துகின்றான். இரும்பியற் சேடன்றன் ஒருதனிப் பிறப்பினன்; வயிர யாக்கையன்; குன்றிரண்டென்று குவவுதோளினன்; கல்லிற் செறிந்த மார்பினன்; எனினும் இவனுள் இராமன்பால் அன்பினால் இளகியதோர் இதயந் துடிக்கின்றது. ஆற்றாச் சீற்றத்தோடு அழன்று, பொருநர்த்தேடிப் புறப்பட்டு முன், வேலைத் திரிந்த மந்தரகிரிபோல் நகரின் நாப்பண் திரிகின்ற இப்பிள்ளையை எதிர்ப்பட்டார், அன்னான் அன்பின் திறத்தில் தம்மைத்துறந்து, கட்டியணைத்துக் காலொடு தலை முத்தமிட்டு முத்தமிட்டு இராமனைப்பிரிய நின்ற தம் துயரையும் சிறிது அயர்வாராவார்.

சேவகனிவனுடன் போர்புரிந்து, இராகவன் முடிபுனை தலைத் தடுப்பதற்கேனும், பெண் ஆட்டம் எங்கும் நடக்கும்படி நிறுவதற்கேனும், தேவர் மூவரும் வந்திலர், யாவரும் வந்திலர். அவ்வேளை, சுமித்திரையைத் தேற்றிக்கொண்டிருந்த இராமனை, இலக்குவன் சிலை கனைத்த குரல்கேட்டு அவ்வயின் அணுகி,

மின்னொத்த சீற்றக் கனல்விட்டு விளங்குகின்ற
பொன்னொத்த மேனிப் புயலொத்த தடக்கையானை
என்னத்த வென்னீ யிறையேனு முனிந்திலாதாய்
என்னத்த னாகித் தனுவேந்துதற் கேதுவென்றான்

[கோபக்கனலை மின்னல்போல் வீசிக்கொண்டு விளங்குகின்ற, பொன்போன்ற மேனியையும் மேகம்போன்ற பெரிய கைகளையும் உடைய இளையவனை நோக்கி, "என் அப்பா ஒருபோதும் நீ சிறிதேனும் கோவித்ததில்லையே. மற்று, இப்பொழுது நீயுத்தஆயத்த முடையவனாய் வில்பிடித்திருப்பதற்குக் காரணம் என்ன—என்றான்]

விடையும் அவ்விளையோன் வாயின் நின்றதாதலின் உடனே,

மெய்யைச் சிதைவித்து நின் மேன்முறை நீத்த நெஞ்சம்
மையிற் கரியாளெதிர் நின்னையே மௌலி சூட்டல்
செய்யக் கருதித்தடை செய்குநர் தேவரேனுந்
துய்யைச் சுடுவெங் கனலிற் சுடுவான் றுணிந்தேன்

[மெய்ம்மையை அழித்து, உன் முதலரசு முறையை நீக்கின, மையிலும் இருண்ட மனமுடைய கைகேசியின் முன்னே, உனக்கு அந்த முடியைச் சூட்டிவைக்கக் கருதி, அதற்குத் தடைசெய்பவர் தேவரேனும் அவரைப் பஞ்சின் நுனியை நெருப்புப் பொசுக்குவதுபோல் அழித்தொழிக்க நினைத்திருக்கின்றேன்]

வலக்கார்முசமென்கையதாக வவ்வானுளோரும்
விலக்காரவர்வந்து விலக்கினுமென்கைவாளிக்
கிலக்கா வெரிவித்துல கேழினொ டேழு மன்னர்
குலக்காவலு மின்றுனக் கியான்றரக் கோடியென்றான்

[வலிமையுடைய வில் என் கையிலிருக்கக் கண்டவுடன், வந்து விலக்குவதற்குத் தேவர்களுந் துணியமாட்டார், அவ்வாறு வந்து விலக்கினாலும் அவர்களை என் கை அம்பிற்கு இரையாக்கி அழித்து, ஏழேழு உலகங்களையும் அரசர் குலக் காவலையும் நானுனக்கு இப்பொழுதே தருவேன், பெற்றுக் கொள்—என்றான்]

தன் பின்னவன் வீரமிது ஒரு பொருளிலது; அதனை வியந்திருக்கமாட்டான் இராமன். தன்பால் பரிவு கூர்ந்த அத் தம்பியின் கள்ளமற்ற மெய்ந்நட்பே இராமனது உள்ளத்தை உருக்கி நெகிழ்த்தியிருத்தல் வேண்டும். உருகிய அவ்வுள்ளத்தில், இன்று இளையோன், சீற்றத்தின் உருக்கொண்ட அன்புபோல் நின்றநிலையும், தனக்கொரு நெடுமுடி நன்கொடையளித்த மொழியும், அச்செனப்படிந்து அழியாத் தன்மையொடு தங்கி விட்டன. இற்றைக்கு ஆண்டோர் பதினான்கு தீர்ந்ததன் பின் தென்னிலங்கைப் போர்க்களத்தில் தசமுகன்மைந்தனால் தன்னுயிர்நீத்துக்கிடந்த இவ்வருமைத்தம்பியைத் தன்னையும் மறந்தனனாய்த் தழுவியழும் இராமபிரான், இறையேனு முயிர் நின்றிலதாயினும் அவனை எழுப்பதற்கு ஈதன்றி வேறோர் மந்திரமில்லை எனத்துணிந்து,

மாதாவுந்நஞ்சுற்றமுநாடுமறையோரும்
ஏதானுரோவென்றுதளர்ந்தேயிறுவாரைத்
தாதாய்காணச்சாலநினைந்தேன்தரையாள்வேம்
போதாயையா பொன்முடி யென்னைப் புனைவிப்பான்.

என்று தூண்டுவானெனின், இவ்வச்சின் பதிவுதான் ஆழமோ, கம்பர்தம் நினைவுதான் நீளமோ யாரே அறியவல்லார்!

இளையா னிதுகூற விராம னியைந்த நீதி
வளையாவரு நன்னெறி நின்னறி வாகு மன்றே
உளையாவறம் வற்றிட ஊழ்வழு வுற்ற சீற்றம்
விளையாத நிலத்துனக் கெங்ஙன் விளைந்த தென்றான்.

[இலக்குவன் இதனைச்சொல்ல, இராமன், உனக்குப் பொருந்திய நீதியினின்று மாறாத நல்லநெறி நடப்பதிலேயே உன் அறிவு எப்பொழுதும் செல்லும்; அப்படியிருக்க, ஒழுக்கம் வழுவிய இக்கோபம், ஒரு போதும் தோன்றியிராத உன்னிடத்தில் இப்பொழுது எப்படி விளைந்தது என்றான்]

பொறுமைக்கிறையாய இராமன், தெரிந்த காரணத்தையும் தெரியாதான்போல் இவ்வாறுரைத்தது ஆற்முயன்றது இலக்குவனுக்கு இயம்புதற்கரிய விந்தையாயிருந்தது.

ASOKA SALT

அசோகா சால்ட்.

(ரிஜிஸ்டர்ட்.)

(அசோகா—உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வராமல் தடுப்பதற்கும் அசோக—உப்பு ஓர் அரு மருந்து.

உணவை நன்றாகச் சீரணஞ் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அசோகா—உப்பு ஜலத்தில் போட்டால் பால் பொங்குவதுபோலவே பொங்கி வரும்.

விலை ரூ. 1—8—0. தபால் செலவு வேறு.

அசோக கம்பெனி
லிமிடெட்,
சென்னை.

சுகவாழ்வு

நாம் நமது நாட்டில் சுகமாக வாழவிரும்பினால் வியாதிகள் என்னும் சத்துருக்களுக்கு இடங்கொடாமல் நமது தேகத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். நீங்கள் தேக அசதி, மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை, மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்டால் உடனே,

ஆதங்க நிக்ரஹ
மாத்திரைகள்

உபயோகியுங்கள். தேகத்தை வஜ்ர சரீரமாக்கி வைரக்கற் கோட்டையைப் போல் பாதுகாக்கும் 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1க்கு ரூபா 1

இனம்! இனம்!!

போஜன விதி

உடனே விலாசத்தைத் தெரிவியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
26, பிராட்வே,
மதராஸ்.

ஏற்படுத்தியது] நாஷனல் [1906.

இன்ஷூயரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூயரன்ஸ் பில்டிங்ஸ், 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

இந்தியர்களால் நடத்தப்படும் கம்பனிகளில் தலையாயது

1930 வருஷாந்திர ரிபோர்டின் சுருக்கம்.

1930 வருடம் நிறைவேறிய புது பிஸினெஸ்	ரூ. 1,13,55,069.
1930 வருடத்தில் அதிகமான லைப் அஸ்யூரன்ஸ் பண்டு	11,51,313.
பிரீமியம் வரும்படி	30,83,936.
1930 வருடத்தில் கிடைத்த வட்டி வரும்படி	7,47,608.

மொத்த அஸ்ஸெட், ரூ. 1,65,00,000க்கு அதிகம்

1930 வருடத்தில் நடை முதலிலிருக்கும் லைப் அஸ்யூரன்ஸின் மொத்தம் 6,55,70,916.

பிரீமியம் மிகக்குறைவு, பாலிஸி நிபந்தனைகள் மிகவும் தாராளமானவை. எல்லாவித லைப் அஸ்யூரன்ஸ்களும் எடுத்துக் கொள்ளப்படும்.

ஏஜென்ஸி எடுத்துக்கொள்வது உங்களுக்கு இலாபமாகும்

113, அரமனைக்காரன் தெரு, சென்னை. } T. அனந்தாசாரி, B. A. செக்ரடரி, மதராஸ் பிராஞ்ச்.

R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்

நாஷனல் பையர் அண்டு ஜனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷியூரென்ஸ் பில்டிங் 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

தீ, மோட்டார்கார் மோட்டார் லைகில் இன்ஷூரன்ஸ்.

கேட்போருக்கு விவரங்கள் அனுப்பப்படும்.

- பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்றாவது ஆண்டு நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா	ரூ. 2 0 0
வெளி நாடு ,,	ரூ. 2 8 0

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணா 5. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசீய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

குறைந்த விலை! நிறைந்த விஷயம்!
சிறந்த கதை! உயர்ந்த பதிப்பு!

பாவலர், நாவலர், மற்று யாவரும் விரும்பும் பாச்சுவை ததும்பப் புதுமை பெற்றிலங்கும்

சுகுணவதி அல்லது
மனம்போல மாங்கலியம்

இனிமை செறிந்த தமிழ் நாவல்

ஸ்ரீமான். மாங்கை. சா. கிருஷ்ணய்யர் எழுதியது.

விலை ரூபா ஒன்றே

ஸ்ரீ கிருஷ்ண பப்ளிஷிங் ஹௌஸ்,
மைலாப்பூர், மதறஸ்.

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM C.C.S.

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M.A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidently in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the Cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0 (V.P. Charges extra)

"KALANILAYAM"

VELLALA STREET,

Purasawalkam, MADRAS.

கலாநிலய முன்னைய இதழ்கள்

மூன்றாண்டு இதழ்களும் பயிண்டுசெய்தும் செய்யாமலும் கிடைக்கும்

முதல் ஆண்டு:—ராமாயணம்—பால காண்டம், அகப்பொருள் வரலாறு, காந்தார நாட்டுக் கட்டழகி எனும் சிறந்த நாவல், மலர் வனம், பழமுதிர்சோலை, தமிழ்ப் பாடம், கண்ணப்ப நாயனார் சரித்திர ஆராய்ச்சி, முதலிய பல அரிய கட்டுரைகள்.

இரண்டாமாண்டு:—அப்பர் தேவார ஆராய்ச்சி, நாவல், ஆங்கிலக் கட்டுரை மொழிபெயர்ப்பு, கம்பராமாயணம்—பாலகாண்டம், அகப்பொருள், தமிழ்ப் பாடம் ஆய பல அரிய கட்டுரைகள்.

மூன்றாமாண்டு:—கம்பராமாயணம்—அயோத்தியா காண்டம், மானத சாத்திரம், குறுந்தொகை (உரையுடன்) ஸமஸ்கிருத நாடக மொழிபெயர்ப்பு. அனைய பல கட்டுரைகள்.

தோல் பயிண்டு—விலை உள்நாடு ரூ. **10—8—0**, வெளிநாடு ரூ. **12—0—0**.

விலாசம்:— (தபால் சார்ஜ் உள்பட.)

கலாநிலயம், புரசைபாக்கம், சென்னை.

டாக்டர் நஞ்சுண்டராவ் பேதீங் ஆயில்.

இந்த எண்ணையை ஸ்நானத்திற்கு உபயோகித்து வந்தால் மூளைக்குக் குளிர்ச்சியையும் திரேகத்திற்கு ஆரோக்கியத்தையும் ஞாபக சக்தியையும் பெருக்கும். சில கண் சம்பந்தமான வியாதிகளையும் நீக்கிவிடும்.

அல்லது ஸ்நானத் தைலம்

விலை ரூபா **1**. எங்கும் கிடைக்கும். ஏஜண்டுகள் தேவை.

எம். சி. என்ஸ். பார்மசி, திருவல்லிக்கேணி, மதராஸ்.

இரண்டு ஸம்ஸ்கிருத மஹா காவியங்களின் மொழிபெயர்ப்பு.

காதம்பரி

1400-வருஷங்களுக்கு முன் பட்டபாணன் இயற்றிய ஸம்ஸ்கிருத கதையின் தமிழ் மொழிபெயர்ப்பு. கதை வெகு அர்புதம். வர்ணனைகள் வெகு சுவை பொருந்தியன. "காதம்பரியைப் படிக்கையில் இரவிகர் உணவையும் விரும்பார்" என்பது வித்வான்களின் பழமொழி. தமிழ் வசன நடை மிக்க இனிது. அநேகம் வித்வான்களும் ஸ்திரிகளும் கொண்டாடுகிறார்கள். விலை ரூ. 1-8.

மேகஸந்தேசம்

ஸ்ரீ காளிதாஸ மஹாகவியின் ஸம்ஸ்கிருத காவியத்தின் சரியான தமிழ் மொழிபெயர்ப்பு. ஒவ்வொரு பத்தியமும் ஒரு பதம் விடாமல் அழகிய வசனநடையில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. சாபவசத்தால் தன் மனைவியைவிட்டுப் பிரிந்த ஒருயக்ஷன் மனைவிக்குத் தூது அனுப்பும் அருமையான விஷயம்—மனோஹரமானது. முகவுரை முதலியவை வெகு விசேஷமானவை. 0-14-0.

இவ்விரண்டு புஸ்தகங்களும் ஒரே தடவையில் வாங்கினால் விலை ரூபா **2**. தபால் சார்ஜு பிரத்யேகம்.

வைத்திய கலாநிதி ஆபீஸ், 85, வெள்ளாழத் தெரு, வேப்பேரி, மதராஸ்.

வர்த்தமானம்

ஜவுளி வியாபாரிகளுக்கு எச்சரிக்கை:—சென்ற வாரத்தில் சர்தார் பட்டேல் ஒரு கூட்டத்தில் பம்பாயில் பேசியபொழுது பின்வருமாறு கூறினார்

ஜவுளி வியாபாரிகள் இனி விதேசி ஜவுளிகளைத் தருவிக்காமலிருக்கும்படி எச்சரிக்கை செய்கிறேன். அவர்கள் விதேச ஜவுளி ஏற்றுமதி வியாபாரக் கம்பெனியோடு ஒத்துழைக்கவேண்டும். அப்போது தான் கையிருப்பிலிருக்கும் விதேச ஜவுளிச்சரக்குகள் சீக்கிரத்தில் தீர்ந்துபோகும். லண்டன் மகாநாட்டில் சவுகரியமான முடிவு ஏற்படாவிட்டால் மீண்டும் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டியிருக்கும் அப்படி ஆரம்பித்து விட்டால் அது இன்னும் மும்முரமாக இருக்கும். வியாபாரமும் வர்த்தகமும் அடியோடு நிறுத்தப்பட வேண்டியிருக்கும். நகர காங்கிரஸ் கமிட்டி மறியல் வேலையை மும்முரமாகச் செய்யத் தீர்மானித்திருக்கும் திட்டத்துக்கு யாவரும் ஆதரவு அளிக்கவேண்டும். விதேச ஜவுளி பகிஷ்காரமே நம் காரியசித்திக்கு ஏற்ற வழியாகும். இங்கிலாந்திலுள்ள கன்ஸர்வேடிவ் கவர்ன்மெண்டோ அன்றித் தொழிற் கட்சிக் கவர்ன்மெண்டோ நமக்கு சுயராஜ்யத்தைக் கொடுத்து விடாது. இதுவரை தொழிற் கட்சிக் கவர்ன்மெண்டார் கன்ஸர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த இராஜப் பிரதிநிதி செய்துவந்த சிபார்சுகளை ஆதரிப்பதைத் தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை. இந்தியாவுக்குக் கதிமோட்சம் ஏற்படவேண்டுமானால் அது இந்தியரையே பொறுத்திருக்கிறது. ஆகவே இங்கிலாந்தின் ராஜீயநிலைமையைப்பற்றி நான் கவலைப்படவில்லை. பொதுஜனங்கள் காங்கிரஸ் ஊழியத்தில் அதிக ஊக்கம் காட்டி வருகின்றனர். காங்கிரஸ் தேர்தலில் போராட்டம் இங்கு மும்முரமாக இருந்ததிலிருந்து பொதுஜன ஊழியஞ்செய்ய அவர்களுக்கு உண்டாகியிருக்கும் உற்சாகம் வெளிப்படுகிறது. ஆனால் இந்த எலெக்ஷன் போராட்டத்துக்கெல்லாம் ஒரு முடிவு இருக்க வேண்டும்? ஜூலை 15-ந் தேதிக்குள் எல்லாச் சச்சரவுகளும் முடிந்துவிடும் விதேச ஜவுளிக் கடைகளையும் சாராயக் கடைகளையும் சாத்வீகமாக மறியல் செய்வதிலேயே யாவரும் கவனம் செலுத்த வேண்டும். மான்செஸ்டரோ அன்றி லங்காஷயரோ தாங்கள் உற்பத்தி செய்யும் பொருளை இந்தியா வாங்கவேண்டுமென எதிர்பார்க்க என்ன நியாயம் இருக்கிறது?

இந்தியா, தன்னகத்திலுள்ள முப்பத்து மூன்று கோடி ஜனங்கள் பட்டினி கிடக்கச் செய்து லங்காஷயரிலுள்ள ஒரு லட்சம் பேருக்கு உணவு அளிப்பானேன்? பகிஷ்காரம் என்றால் அன்னியரிடம் துவேஷம் கொள்ளுவதாக நினைக்க வேண்டாம். இந்தியா தனது கைத்தொழிலை அபிவிருத்தி செய்து கொள்வதைக் கண்டு பிரிட்டிஷார் ஏன் கவலைப்பட வேண்டும்? கனடா தேசத்தாரையும் ஆஸ்திரேலியா தேசத்தாரையும் தங்கள் முக்கிய உறவின் முறையாரையும் ஏன் மான்செஸ்டர்த் துணியையும் லங்காஷயர்த் துணியையும் வாங்கும்படி செய்யக்கூடாது? என்று கூறி முடித்தார். கடைசியில் அவர் தொண்டர்கள் பலனை எதிர்பார்[illegible]வேண்டுமென்றார்.

மகாத்மாவும் மதுவிலக்கும்:—மகாத்மா ஜூன் மாதம் 12-ந் தேதி சூரத்தை யடுத்த மரோலி என்ற கிராமத்தில் நெசவுச் சங்கம் ஒன்றுக்கு அஸ்திவாரக் கல் நாட்டுகையில் செய்த ஒரு பிரசங்கத்தில் தாம் போயர் யுத்தத்தின் போது ஒரு சமயம் அடிபட்டவர்களைத் தூக்கிச் செல்லும் ஆட்கள் மிகக் களைத்துப் போய்த் தம்மைச் சாராயம் வாங்கிக் கொடுக்கும்படி கேட்டதால் தாம் அவர்களுக்குச் சாராயம் வாங்கிக் கொடுத்ததாகச் சொன்னது பல விதமாக அர்த்தப்படுத்த இடம் கொடுத்திருக்கிறது. மதுவிலக்கு விரோதிகளாகவுள்ளவர் இதைப் பலவிதமாகத் தங்களுக்குச் சாதகமாக உபயோகப்படுத்திக் கொள்ளப் பார்க்கின்றனர் அவர்களில் சிலர் அவர் கொள்கையை மாற்றிக் கொண்டதாக நினைத்து அவரைப் பாராட்டியும் எழுதியிருக்கிறார்கள். ஆகவே அவர் மதுவிலக்கு சம்பந்தமாக அவருக்குள்ள அபிப்பிராயத்தை மீண்டும் திட்டமாக வெளியிட விரும்பி அவர் பின்வருமாறு எழுதுகிறார்.

இந்தியா முழுமைக்கும் ஒரு மணி நேரத்துக்கு என்னைச் சர்வாதிகாரியாக நியமித்தால் முதல் முதலில் நான் யாதொரு நஷ்டஈடும் கொடுக்காமலே சாராயக் கடைகளை எல்லாம் மூடிவிடுவேன். கூர்ஜரத்தில் எனக்குத் தெரிந்தவரையில் உள்ள கள் கொடுக்கும் மரங்களையெல்லாம் வெட்டி விடுவேன். தொழிற் சாலைகளை வைத்து நடத்துபவர்களைத் தம் தொழிலாளரை இரக்கத்துடன் நடத்தும்படி வற்புறுத்துவேன். தொழிலாளர்களுக்காகச் சிற்றுண்டிச் சாலைகளும் பொழுதுபோக்குச் சங்கங்களும் ஏற்படுத்தச் சொல்வேன். அங்கு அவர்களுக்குக் குற்றமில்லாத பானங்களும் பொழுது போக்குக்கு ஆட்சேபமில்லாத சில வசதிகளும் அளிக்கும்படி செய்வேன். தொழிற்சாலை வைத்திருப்போர் பணமில்லையெனச் சொன்னால் அந்தத் தொழிற்சாலைகளை மூடிவிடும்படி சொல்வேன். ஒரு மணிநேர சர்வாதிகாரம் கிடைத்தாலும் பூரண மதுவிலக்குக் காரணாக நான் இருப்பதால் நிதான புத்தியுடன் விஷயங்களைக் கவனிப்பேன். ஐரோப்பிய நண்பர்களும் நோய்வாய்ப்பட்டவர்களும் வைத்தியர் யோசனைப்படி பிராந்தி சாப்பிட வேண்டியிருந்தால் அவர்களுக்கு நற்சாட்சிப் பத்திரம் கொடுத்துத் தக்கரசாயன சாஸ்திரியிடம் குறிப்பிட்ட அளவு கவர்ன்மெண்டு செலவில் பிராந்தி வாங்கிக் கொள்ள அநுமதி கொடுக்கப்படும். இதனால் கவர்ன்மெண்டுக்கு வருமானம் குறைந்து விடுவதாகச் சொல்லப்பட்டால்நான் உடனே ராணுவச்செலவைக்குறைத்து விடுவேன். சேனாதிபதி நிலைமைக் கேற்றவாறு தமது சாமர்த்தியத்தால் சமாளிக்கவேண்டியதே. தொழிற் சாலைகளை மூடிவிட்டதால் வேலையை இழந்த தொழிலாளர்களை நான் உடனே மாதிரிப் பண்ணைகளுக்கு அனுப்பி விடுவேன். இதற்குள் தொழிற் சாலைகளை நான் சொன்ன நிபந்தனைகள் படி லாபகரமாகவே நடத்தலாம் என்று தொழிற்சாலைக்காரர்கள் சொன்னால் அவர்களைப் பழையபடி தொழிற்சாலைகளை நடத்த அனுமதித்து விடுவேன்.

188924

KALANILAYAM: REG. NO. M. 2324.

:: பிரபல ஜோதிஷர் :: மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர்.
ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலை அணா 8. பண்டித காழியூர்,
ம. ஸ்ரீனிவாஸாசாரியார்,
218 தங்கசாலை வீதி, மதராஸ்.

—: வைத்திய ரத்ன :—
பண்டிட். D. கோபாலாசார்லு அவர்களின்
ESTD 1898
"ஜீவாமிருதம்"

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப் போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது
எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0
ஆயுர்வேதாஸ்ரமம்
தபாற் பெட்டி. 287. மதருஸ்.
கேடலாக் இனாம்.

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0
காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0
தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

நம்பிக்கையான புஸ்தக வியாபாரிகள்

தமிழ், இங்கிலீஷ் தெலுங்கு, ஹிந்தி புஸ்தகங்கள் எல்லாம் எங்களிடம் கிடைக்கும். தேவையான புஸ்தகங்களுக் கெழுதவும்.

கே. எஸ். மணியம் அண்டு கோ.,
புஸ்தக வியாபாரிகள், இராயப்பேட்டை, மதராஸ்.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்
:: மகா பாரதம் தமிழ் வசனம் ::
திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.
(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

ஆயுர்வேத ரத்ன பண்டிட்
டாக்டர் N. V. ஸ்ரீராமாசார்லு
அவர்களின்
'மஹா சந்தனாதித் தைலம்'
(ரிஜிஸ்டர்ட்)

ஒப்புயர்வற்ற இத்தைலம் மூளைக்குப் பலத்தை அளித்து ஞாபகசக்தியை வளர்ப்பதிலும் நரையை நீக்கி, கூந்தலைக் கருமையாகவும் மழமழப்பாகவும் வளர்ச்சி செய்து அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதில் பெயர்பெற்றது. கபால உஷ்ணம், மறதி மனச்சோர்வு, மயக்கம் மந்தப் பார்வை, தலைவலிபோன்ற நோய்களைப் போக்கி ஆனந்தத்தை அளிக்க வல்லது. மூளையைக் குளிர்ச்சி செய்து மனோரம்மியத்தை வளர்க்கும் இத்தைலம் ஆயிரக்கணக்கானவர்களால் போற்றப்பட்டது. ஒரு முறை உபயோகித்துப் பார்த்தால் இதன் அபாரசக்தியும் பெருமையும் நன்கு விளங்கும்.

1 மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய 12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா **5**.

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி
லிமிடெட், சென்னை.

மானேஜர்.—வி. ரகுபதி, B.A.,B.L.
தபால் பெட்டி 151, சென்னை.
தந்தி விலாசம் 'கல்பம்' சென்னை.
ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.
கேட்லாக் இனாம்.

தமிழன்பர்களே! இவரைத் தெரியுமா?

இவரே தற்காலத் தந்தியையும், டெலிபோனையும் கிராமபோனையும், சினிமாவையும், மின்சார விளக்கையும் கண்டுபிடித்தவர். கம்பியில்லாத் தந்திக்கு வழிகாட்டியவர். ஏழைக் குடும்பத்தில் 1847-ல் பிறந்து, தாய் சொல்லிக்கொடுத்த கல்வியினால் பத்திரிகை விற்பவராயிருந்து எண்ணிலாப் புதுமைகளைச் செய்து அமெரிக்காவில் பெருஞ் செல்வராய்த் திகழும்,

தோமாஸ் ஆல்வா எடிசன்

இவருக்கு இப்போது வயது 84. இன்னும் ஊண் உறக்கமின்றிப் புதிய கருவிகளைக் கண்டுபிடித்து வருகின்றார். இப்போது இலைகளினின்றும் ரப்பர் எடுக்க முயற்சிக்கின்றார். இவர் ஹென்ரி போர்டுக்கு நண்பர்.

இவரது வரலாறு படிக்கப்படிக்க இன்பந்தரும். ஆப்டோன் படங்களுடன் உயர்ந்த காகிதம் அழகிய கட்டடம். விலை ரூபா **1-4**.

தபாற் செலவு அணா 4.

சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்.,
6, பவளக்காரத் தெரு, சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)